உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
e-magazine
www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



12 ராசிகளுக்கான முருகன் கோவில்

அறுபடை முருகன் தலசிறப்பு,

கங்கை தீர்த்தம் வழங்கும் கோவில்

பழநி முருகனை காக்கும் காவிரி

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

பாதயாத்திரை தொடங்கிய முதல் முருகன் ஸ்தலம்

முழங்கால் வலி போக்கும் முருகன் கோவில்

## பழனி தண்டாயுதபானி சுவாமி திருக்கோயில்

# கும்பாபிஷேகம், தைபூசம் சிறப்பு மலர்

பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூசத்திற்கு வருகைதரும் பக்தகோடிகளை வருக வருக என அன்புடன் அழைக்கிறோம்!

**தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! அப்பளத் தயாரிப்பில் நாங்கள் முன்னோடிகள்!**



# ஸ்ரீராம் அப்பளம் & புட் பஜார்

# SRI RAM APPALAM

Special Quality

SRI RAM APPALAM

Special Quality

UJALA APPALAM

Export Quality

SRI BALAJI APPALAM

எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்

ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ருன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)

HACCP CERTIFIED

ISO

தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்

Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com

தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009

விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.

தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908

# மூன்றாம் படைவீடு
# பழனியா? திருவாவினன்குடியா?





குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பார்கள், அந்தவகையில் திருப்பதி மலையில் அருள் புரியும் பெருமாளைக்கூட முருகனின் வடிவத்தை மாற்றி அமைத்துவிட்டனர் என்று கூறுபவர்களும் உள்ளனர், இதில் எந்த அளவிற்கு உண்மை என்பதை யாரும் ஆராயவில்லை, காரணம் மாமனை வணங்கினால் என்ன மருமகனை வணங்கினால் என்ன எல்லாம் ஒன்றிற்குள் அடக்கம் என்பதால் ஆராய்ச்சிக்கு இடம் கொடுக்காமல் வழிபாடு செய்யப்பட்டுவருகிறது.

இதைப்போன்று முருகனின் ஆறுபடை வீடுகளாக விளங்கும் கோவில்கள்

1. திருப்பரங்குன்றம் – மதுரை மாவட்டம்
2. திருச்செந்தூர் – தூத்துக்குடி மாவட்டம்
3. திருவாவினன்குடி
   (எ) பழனி – திண்டுக்கல் மாவட்டம்
4. சுவாமிமலை – (தஞ்சாவூர் மாவட்டம்)
5. திருத்தணி – திருவள்ளூர் மாவட்டம்)
6. பழமுதிர்சோலை – மதுரை மாவட்டம்

இந்த ஆறுபடை வீடுகளில் மூன்றாவதாக விளங்குவது பழனியாகும். இந்தப் பழனிமலைக்குறித்த ஒரு சர்ச்சையும் உள்ளது. பழனி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள திருவாவினன்குடி முருகன் கோவில் ஆறுபடை வீடுகளில், மூன்றாம் படை வீடு என்று குறிப்பிடப்படுகிறது.

இது தமிழ்நாடு மாநிலத்தில், திண்டுக்கல் மாவட்டம், பழனி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இக்கோ யிலில் முருகப்பெருமான் குழந்தை வேலாயுத சுவாமியாக அருள்புரிகிறார்.

திருவாவினன்குடி கோவிலைத்தான் மூன்றாம்படைவீடாக சங்க இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சங்ககாலப் புலவரான நக்கீரரும், பிற்காலத்தவரான அருணகிரிநாதரும் திருவாவினன்குடி முருகனைக் குறித்துப் பாடல்கள் பாடியுள்ளனர். அகத்தியர் இங்கு தவம் புரிந்து முருகனிடம் தமிழிலக்கணம் பயின்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

திரு என்கின்ற இலட்சுமி தேவியும், ஆ என்ற காம தேனுவும், இனன் என்ற சூரிய பகவானும், இத்தலத்து முருகப்பெருமானை வழிபட்டமையால் திருஆஇனன்குடி என்று பெயர் பெற்றதாக சொல்லப்படுகிறது.

மாம்பழத்திற்காக கோபம் கொண்டு வந்தமர்ந்த முருகப் பெருமானை சிவனும், பார்வதியும், இத்திருத்தலத்திற்கு வந்து ஞானப் "பழம் நீ" என்று முருகனுக்கு சூட்டிய பெயரே, நாளடைவில் மருவி பழநி என்று இந்த தலம் அமைந்துள்ள ஊருக்கு பெயராக வரக் காரணமாக இருந்ததாக இத்தலத்துப் புராணம் கூறுகின்றது.

பழநி மலைக்கோவிலுக்கு செல்லும் வழியில், பழநி மலை அடிவாரத்தில் வையாபுரி ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இக்கோவிலின் வடகிழக்கு திசையில் சரவணப் பொய்கை உள்ளது. இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்ட பின்னரே, மலைக்கோவிலுக்கு சென்று தண்டாயுதபாணியரை வழிபடுவது மரபு.

திருவாவினன்குடி கோவிலையே நக்கீரர் பெருமான், திரு முருகாற்றுப்படையிலே முருகனின் மூன்றாம் படைவீடாக குறிப்பிட்டதுடன்,

"தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள் ஆவி

னன்குடி அசைதலும் உரியன்: அதாஅன்று"

அதாவது, குற்றம் இல்லாத கோட்பாடுடன், யாவர்க்கும் நன்மையே விளைவிக்கும் உயர்ந்த கொள்கை உடைய தன் துணைவியோடு சிலகாலம் ஆவினன்குடியில் தங்கியிருப்பதற்கு உரிமை உடையவன் என்று போற்றி பாடியுள் ளார் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

முருகனின் ஆறுபடை வீடுகளில், ஐந்து படை வீடுகளில் ஒரே தலத்தில் முருகப்பெருமான் காட்சி தந்தாலும், பழனியில் மட்டும் இரண்டு ஸ்தலங்களையும் இணைத் தவாறே தரிசிக்கவேண்டும் என்றும், இந்த தரிசனமே மூன்றாம் படைவீட்டின் தரிசனத்திற்கு நிறைவு தரும் என்றும் கூறப்படுகிறது.



கோபம் கொண்டு வந்து அமர்ந்த இடமான பழநி மலைக்கோவிலில் தண்டாயுதபாணித் தெய்வமாகவும், திருவாவினன்குடி திருத்தலத்தில் மயில் மீது அமர்ந்த குழந்தை வேலாயுத சுவாமியாகவும் காட்சியளிக்கிறார். சங்க காலத்தில் இந்த இரண்டு திருத்தலங்களையும் சேர்த்தே இந்த ஊரின் பெயர் திருவாவினன்குடி என்று இருந்ததாக புராணங்கள் சொல்கின்றன.

ஆக நக்கீரர் பெருமகனார் பாடிய திருத்தலம் பழநி மலைக்கோவில் மற்றும் திருவாவினன்குடி கோவில் இரண்டையும் உள்ளடக்கிய ஒரு தலமாகவே கொள்ளலாம்.

எனவே மலைக்கோவில் மற்றும் திருவாவினன்குடி திருத்தலம் இரண்டையுமே மூன்றாம் படைவீடாகக் கொள்ள வேண்டும்.

ஆனால் சிலகாலம் முன்பு வரை இக்கோவிலின் சன்னதிக்கு வெளியே மூன்றாம் படைவீடு என்ற பெயர்ப் பலகை வைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் அப்பெயர்ப்பலகை நீக்கப்பட்டுவிட்டது.

இன்றும் பழநி மலை அடிவாரத்தில் படிக்கட்டு நடைபாதை முடிந்து வெளியே வரும் இடத்தில் அரசாங்கத்தால் மூன்றாம் படைவீடு திருவாவினன்குடி செல்லும் வழி என்று வழிகாட்டும் பலகை வைக்கப்பட்டுள்ளது.

அறுபடை வீடுகளில் சிறப்பாக கொண்டாடப்படும் பங்குனி உத்திரத் திருவிழா, திருவாவினன்குடி திருத்தலத்திலே கொடியேற்றத்துடன், திருக்கல்யாணம் மற்றும் தேர் வடம் பிடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானத்தால் நடத்தப் படுகின்றன.

இன்னும் விரிவாக கூறவேண்டுமென்றால், தாய் தந்தையுடன் கோபங்கொண்ட முருகப் பெருமான் கோபத்துடன் வந்தமர்ந்த ஸ்தலம் பழனிமலையாகவும், சிவனும் பார்வதியும் முருகனை சமாதானப்படுத்தி அவரை சாந்தப்படுத்திய இடம் திருவாவினன்குடி என்றும் கூறப்படுகிறது.

முருகன் கோபத்தில் வந்தமர்ந்த இடத்தில், போகர் செய்த மூன்று நவபாஷான சிலைகளில் ஒன்றை பிரதிஷ்டை செய்ததாகவும், நாளடைவில் இச்சிலையின் மருத்துவ மகிமையால் பல்வேறு நோய்கள் குணமாகியதால், மருத்துவ முருகனாக மாறி அவரின் புகழ் உலக மெங்கும் பரவி, திருவாவினன்குடியைவிட பழனி மலை யில் உள்ள நவபாஷாணசிலைக்கு பக்தர்கள் கூட்டம் பெருகியதாக கூறப்படுகிறது.



இந்த நிலை தற்போது பழனி என்றால் மலைமீதுள்ள தண்டாயுத ஸ்வாமியை மட்டுமே குறிப்பதாகவும் தவறாக பொருள்கொள்ளப்படுகிறது. உண்மையில் மூன்றாம் படைவீட்டை தரிசித்த முழு பலன் கிடைக்கவேண்டுமென்றால், தண்டாயுதஸ்வாமி கோவிலுடன், திருவாவினன்குடி குழந்தை வேலப்பரையும் வணங்கினால்தான் முழு பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.




பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்.
சுவையில் புதுமை... மனதில் இனிமை...
ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் துணை
கோகுல் காபி

தரமான பில்டர் காபித்தூள் டீத்தூள் கிடைக்கும்
சூர்யா காபி ஒர்க்ஸ்
13-4-135, உள்கடை வீதி, வத்தலக்குண்டு-624202
For online Purchase: www.gokulcoffee.com
Cell: 99767 44401 / 8778843612



பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

# S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

## மரம், ஓடு வியாபாரம் & சாமில்

## SAK சீனியப்பா குரூப்ஸ் SAK





எங்களிடம் ஒரிஜினல் (பர்மா), ஆஸ்திரேலியாவேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

## சீனியப்பா லாட்ஜ் A/C

## SAK திருமண ஹால்



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை.



9842868256

aanmeegamalar.com

# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!



எல்லா முருகன் கோவிலும் சிறப்புதான்...
முருகன் என்றாலே சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன்மையான கோயில்.. மயிலம் சுப்பிரமணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும்.

ராசிப்படி முருகன் கோயில்கள்..



| | |
|---|---|
| மேஷம்: | தாண்டுகுடி முருகன் கொடைக்கானல், |
| ரிஷபம்: | சுவாமிமலை: |
| மிதுனம்: | செவலூர் பூமினாதேஸ்வரர் |
| கடகம்: | பழனி முருகன் |
| சிம்மம்: | திருபரங்குன்றம் முருகன் |
| கன்னி: | திருசெந்தூர் முருகன் |
| துலாம்: | வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி |
| விருச்சிகம்: | மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்: |
| தனுசு: | திருத்தணி |
| மகரம்: | வயலூர் முருகன் |
| கும்பம்: | ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில் |
| மீனம்: | திருவக்கரை பத்ர காளி |

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை நிச்சயம் உண்டு.

## முருகனும் 12 கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்துகிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.

ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது.

பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

## பழநி முருகனை காக்கும் காவிரி நதி

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.



திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள்,ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனிதநீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவ பாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.

# 16 வடிவங்களில் காட்சிதரும்

# முருகப்பெருமான்

**1. ஞானசக்திதரர்:** இந்த முருகனை வழி பட்டால் நினைத்த காரியங்கள் வெற்றி யுடன் முடியும். திருத்தணிகையில் எழுந் தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஹஞானசக்திதரர்' திருக்கோலமாகும்.

**2.கந்தசாமி:** இவரை வழி பட்டால் சகல காரியங்களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**3.ஆறுமுகதேவசேனாபதி:** இவரை வழிபட்டால் மங்கள கரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுரு வம் உள்ளது.

**4. சுப்பிரமணியர்:** இவர் தன்னை வழிபடும் பக்தர் களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக் கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

**5.கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள்விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

**6.சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத் வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

**7. கார்த்திகேயர்:** இவரை வழிபட்டால்சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த் திகை நட்சத்திர நாட்களில் இவரைவழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். கும்பகோணத் தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

**8. குமாரசாமி :** இவரை வழிபட் டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடி வம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக் கிறது.

**9. சண்முகர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை வழிபட்ட பலன் கிடைக்கும். திருச்செந்தூரில் உள்ள முருகன் அருட் கோலம் சண்முகர் திருவடிவாகும்.

**10. தாரகாரி:** ஹதார காசுரன்' என்னும் அசு ரனை அழித்ததால் முருகப் பெருமான் இத்திரு நாமத் தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழிசெய்யும் திருக் கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் தாரகாரி இருக் கிறார்.

**11.சேனானி:** இவரை வழிபட்டால் பகை அழி யும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திரு வுருவம் இருக்கிறது.

**12. பிரம்மசாஸ்தா:** இவரை வழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகல வித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**13. வள்ளிகல்யாணசுந்தரர்:** இவரை வழிபட்டால் திருமணத் தடைகள் விரைவில் அகலும், கன்னிப் பெண்களுக்குக் கல்யாண பாக்கியம் கிடைக்கும். திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் இவர் திருவுருவம் இருக்கிறது.

**14. பாலசுவாமி :** இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடு பவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக்கண்டிர், ஆண்டாள் கும்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**15. சிரவுபஞ்சபேதனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம் உண்டு.

**16. சிகிவாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழி படுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.



# முழங்கால் வலி தீர்க்கும் முருகன் சூரிய அஸ்தமனத்திற்கு பிறகே அபிஷேகம் நடைபெறும் கோவில்

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சுமார் 22 கி.மீ தொலைவில் உள்ளது மேலக்கொடுமலூர். முருகப்பெருமான்.

சூர சம்ஹாரத்துக்குப் புறப்பட்ட போது, அன்னை சக்தியிடமிருந்து வேல் மற்றும் பல ஆயுதங்களைப் பெற்றுச் சென்றார். அவற்றுள் பிரதானமான `மழு' எனும் ஆயுதத்தை முருகப் பெருமான் பெற்ற தலம் தான் கொடுமழுவூர் என்றழைக்கப்படும் மேலக்கொடுமலூர்.

அசுரர்களை அழித்துவிட்டுத் திரும்பிய முருகப் பெருமான், மாலை வேளையில் இத்தலத்தை அடைந்தார். அங்கே தவமியற்றிக்கொண்டிருந்த முனிவர்களுக்கு மேற்கு முகமாகக் காட்சியளித்தவர், அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தத் தலத்திலேயே ஸ்ரீகுமரய்யா என்னும் திருப்பெயருடன் கோயில் கொண்டார்.

## முருகனுக்கு முக்கனி பூஜை

இங்கே முருகப்பெருமான் அஸ்தமன வேளையில் முனிவர்களுக்குக் காட்சி தந்ததால், சூரியஅஸ்தமனத் துக்குப் பிறகே அபிஷேக ஆராதனைகள் நடைபெறு கின்றன.

திங்கள், வெள்ளி, கிருத்திகை ஆகிய நாள்களில் இரவு வேளைகளில் 33 வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வைகாசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளால் செய்யப்படும் முப்பழ பூஜை மிகவும் பிரசித்திபெற்ற பூஜையாகும்.

இங்கே ஸ்ரீகுமரய்யாவுக்கு சுத்த அன்னம் நைவேத் தியம் செய்யப்படுவதில்லை. பழங்கள், தேன் கலந்த தினைமாவு, வெல்லம் கலந்த பாசிப்பருப்பு, கைக்குத்தல் அரிசிஆகியவையே நைவேத்தியமாகப் படைக்கப்படு கின்றன.

பாம்பன் சுவாமிகள், திருவேகம் பத்தூர் கவி ராஜ பண்டிதர், எமனேஸ்வரம் ஜவ்வாது புலவர் ஆகியோர் இத்தலத்தில் அருளும் முருகனைப் போற்றிப் பாடியுள் ளனர். இங்கு முருகப்பெருமான் பல்துலக்கி விட்டு வலப்புறமாக வீசிய குச்சியே உடைமரமாக வளர்ந்து, கோயிலின் தலவிருட்சமாக அமைந்திருப்பதாக கூறப் படுகிறது.

## முருகன் அருளால் முழங்கால் வலி தீரும்!

தீராத முழங்கால் வலியால் அவதிப்படுபவர்கள், இந்தக் கோயிலுக்கு வந்து குமரய்யாவை வேண்டிக் கொண்டு,



மஞ்சள் பூசப்பட்ட உடைமரக் கால்களை (கவட்டையுடன் கூடியது) வாங்கி சமர்ப்பித்தால், நாள்பட்ட முழங்கால் வலி நீங்கி விடும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

மேலும் வயிற்று வலி, நெஞ்சு வலி ஆகிய பாதிப்பு களால் அவதிப்படும் அன்பர்கள், இங்கு வந்து மாவிளக்கு ஏற்றி வைத்து முருகப் பெருமானை வணங்கி வழிபட்டுச் சென்றால், விரைவில் அந்தப் பிரச்னைகள் தீரும் என்கிறார்கள்.

அதேபோல், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் 48 நாள்கள் விரதம் இருந்து, கோயிலின் தலவிருட்சமான உடைமரத்தின் இலைகளைப் பிரசாத மாகப் பெற்று உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்ப தால், ஏராளமானோர் இந்த பிரசாதத்தை வாங்கி பயன டைந்துள்ளனர்.

# 24 மணி நேரம் அன்னதானம் நடைபெறும் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழக சிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நலமாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திருவிளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடைபெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள்இரவு, பகலாக குவிகின்றனர்.





தினமும் காலை அன்னதானத்தில் சர்க்கரை பொங்கல், வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது.

பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்னதானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி கோவிலில் உள்ள ஞானசேகர சுவாமிகள் கூறியதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள்.


aanmeegamalar.com



அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழவேண்டும்

பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம்
மற்றும் தைப்பூச விழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை வருக! வருக!
என வரவேற்கிறோம்



என்றும் சுவாமிஜி, மாதாஜி ஆசியுடன்



அய்லுக் சிட்டி
லேண்ட் புரோமோட்டர்ஸ்

அய்லுக் C.சண்முகம் Cell: 98651 32111, 99444 78464

தலைமை அலுவலகம்: 2/415, ஓட்டப்பாலம், பரமக்குடி-623707

கிளைகள்: கேணிக்கரை ரோடு, பைசல் ரோடு, இராமநாதபுரம்
கடச்சனேந்தல் புதுப்பட்டி ரோடு, மங்களகுடி விலக்கு, மதுரை

# தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் உள்ள கால்பிரிவு கிராமத்தில் தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன் திருக்கோவில் உள்ளது. கால்பிரிவு கிராமத்தை சேர்ந்த ஸ்ரீ ஆறுமுக சுவாமி என்ற தீவிர முருக பக்தர் முருகனுக்கு சிறு கோவில் அமைத்து பூஜைகள் செய்து வந்தார்.

எப்போதும் முருகன் மீது தீராத அன்பு கொண்ட அவர் தினமும் பாலபிஷேகம் செய்தும் பூஜை செய்து வந்தார்.

100 ஆண்டுகளுக்கு முன் பங்குனி உத்திரதினம் செல்வமுருகனுக்கு அபிஷேகத்திற்கு வழங்கும் பாலை கன்று குட்டி குடித்து விட்டதாகவும், அபி ஷேகத்திற்கு பால் இல்லை என்று பால் வழங்கும் விவசாயி தெரிவித்துவிட்டார்.

செல்வ முருகன் அபிஷேகத்துற்கு பால் இல்லை என முருக பக்தர் ஆறுமுக சுவாமி மனம் வருந்திய போது 'தீடீர்' என்று வைகை ஆற்றில் ஊற்று தோன்றி குடம் செம்புகளில் தண்ணீர் நிரப்பி அபிஷேகம் செய் என தென் பகுதியில் இருந்து கணீர் குரல் ஒலித்து மறைந்தது.

திருச்செந்தூர் முருகனே கூறியது போல் உடனே ஆறுமுக சுவாமி மற்றும் கிராம மக்கள் வைகை ஆறு சென்று குடம், செம்பு பாத்திரங்களில் ஆற்று நீரை நிரப்பி செல்வமுருகன் கோவிலை நோக்கி ஊர்வலமாக வந்து கோவிலை வந்து அடைந்த போது தண்ணீர் நிரம்பிய குடம் செம்பு பாத்திரங்களில் பால் பொங்கி வழிந்தது.

அதை தொடர்ந்து செல்வமுருகனுக்கு குடம் குடமாக தண்ணீரை அபிஷேகம் செய்தபோது அனைத்தும் பாலாக மாறியது பால் அபிஷேகமும் தங்கு தடையின்றி நடந்தது.

நாகலிங்க பூமரம், தென்னை மரங்கள் அழகிய வயல்வெளி பகுதியில் அமைந்து உள்ளது.செல்வமுருகன் கோவில் இக்கோவில் வாசலில் மகா கணபதியும், செல்வ முருகன் வள்ளி தெய் வானையுடன் காட்சி தருகிறார். காவல் தெய்வமாக இடும்பன் சுவாமியும் உள்ளது. கோவில் முன்பு அரசமரம், வேம்புமரம் இணைந்த மரத்தடில் இருநாகர் தெய்வங்கள் விநாயகர் சன்னதியும் உள்ளது. சிறிய கோவிலாக இருந்த செல்வமுருகன் கோவில் 2003ம் ஆண்டு பெரிய கோவிலாக கட்டி கும்பாபிஷேகம் நடந்தது. வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை தரும் செல்வ முருகனாக இங்கு காட்சி அளிக்கிறார்.

ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதில் ஏராளமான பக்தர்கள்





வைகை ஆற்றில் இருந்து தீர்த்த காவடி, பால்காவடி, அலகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். அன்று முருகனுக்கு நடைபெறும் பால் அபிஷேகத்தை காண ஏராளமானோர் கோவிலுக்கு வருவார்கள்.

இதுபற்றி கோவில் ஸ்தாபகர் ஏ.ஆர்.பி. முருகேசன் கூறுகையில், தண்ணீரை பாலாக மாற்றியதால் பச்சை தண்ணீரை பாலாக மாற்றிய செல்வமுருகன் எனவும் அழைக்கப்படுகிறது.

கடும் வறுமையில் வாடுபவர் செல்வமுருகனை மன முருகி வணங்கி இன்றும் செல்வநிலை அடைந்து உள்ளனர். வேண்டுதல் நிறைவேறியவர்கள் ஆண்டு தோறும் பங்குனி உத்திர திருவிழா அன்று குடம் குடமாக பால் அபிஷேகம் செய்கின்றனர்.

ஒன்பது சஷ்டி தினம் அன்று விரதம் இருந்து செல்வ முருகனை வணங்கினால் குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது. பங்குனி உத்திரம் பெரிய திரு விழாவாக நடத்தப்படுகிறது. வயலூர் முருகன் கோவில் நினைவுபடுத்துவது போல் இயற்கை அமைப்போடு செல்வமுருகன் கோவில் அமைந்து உள்ளது என அவர் தெரிவித்தார்.



# கும்பாபிஷேகத்திற்கு கங்கை தீர்த்தம் தரும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்





சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்தி பகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப் படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி

சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழங்கபடும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெரு மானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவி லில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.

முன்னோர்கள் திதி தர்ப்பணம் நடைபெறும் நாள்: ஆடி அமாவாசை மற்றும் மாஹாளய அமாவாசை அக்டோபர் 14.10.2023 சனிக்கிழமை 2024 தை அமாவாசை.







**பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்**

நற்பவி என்று சொல்வோம் நன்மைகள் பல செய்வோம்

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம்

# குறிச்சி ஸ்ரீ வழிவிடுபெரியநாச்சி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவில்

     

**கோவில் நிகழ்ச்சிகள் விபரம்**

| | |
|---|---|
| மாதம்தோறும் பிரதோஷ வழிபாடு மற்றும் சனிபிரதோஷ விழா, பௌர்ணமி பூஜை | 14.04.2023 தமிழ்வருட பிறப்பு சிறப்பு பூஜை தொடர்ந்து சித்திரை பௌர்ணமி விழா |
| 05.02.2023 தைபூசம் செந்தில் ஆண்டவர்க்கு அபிஷேக அன்னதானம் | 02.06.2023 வைகாசி விசாகம் விழா |
| 18.02.2023 மஹாசிவராத்திரி இரவு முழுவதும் அபிஷேகம் பூஜை வழிபாடு | ஆடி அமாவாசை, புரட்டாசி மாஹாள. அமாவாசை தினங்களில் காலை 7 மணிமுதல் 12 மணிவரை முன்னோர்கள் தர்ப்பண பூஜை அன்னதானம் |
| 05.04.2023 பங்குனி உத்திர விழா அபிஷேகம் அன்னதானம் | ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை தீப விழா |

**கோவில் கும்பாபிஷேகத்திற்கு இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கப்படுகிறது தமிழகத்திலேயே காசி சிவனுக்கு கங்கை தீர்த்தம் அபிஷேகம் செய்து பக்தர்கள் அனைவரும்தொட்டு வழிபடும் கோவிலாகும்.**



இறைபணியில்

**S.P.தேவர்**

**புபேஸ் ரியல் எஸ்டேட்**

22, பனகல் பார்க், சென்னை17

செல்: 9444159653,

9444638782, 9443020577,

9176242221 9566183703

வீடு 04423751097



aanmeegamalar.com

# மீனாட்சி அம்மன் பிறவிக்கு காரணமான
# வேம்பத்தூர் கைலாசநாதர்
# சிவன் கோவில்

மதுரை பட்டணத்தில் மணிபுரகத்தை தலை நகராக கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு நல்லாட்சி புரிந்து மக்களை காத்து வந்த மலையத்துவஜ பாண்டிய மன்னர்க்கு குழந்தை பாக்கியம் வேண்டி சிவன் மீது தீவிர பக்தி கொண்டு சிவனடியார்களுக்கு தொண்டு செய்து வந்தார்.

மன்னரின் தொண்டில் மகிழ்ச்சி அடைந்த சிவனடியார்கள் புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தி அதன் பலனாக அன்னை பராசக்தியே உங்களுக்கு அவதரிப்பாள். என்று ஆசிவழங்கி னார்கள்.

யாக ஏற்பாடுகளை செய்துவிட்டு யாகம் நடைபெறும் முன் கைலாயம் சென்று சிவனை தரிசிக்க மன்னரும் அவர் மனைவி காஞ்சனமலையுடன் யாத்திரையாக புறபட்டு சென்றனர்.

கால சூழ்நிலையால் இயற்கை சீற்றங்களால் யாத்திரையை தொடர முடியாமல் சிவனை மனதில் நினைத்து மனம் உருகி வேண்டினார்கள்.

அப்போது நூறு வயதை கடந்த முதியவர் தள்ளாடியபடி, "மனமே கைலாயம் சிவலிங்கத்தை ஏந்தி கொண்டு எங்கு நிற்கிறாயோ அதுவே கைலாயம்" என கூறியபடியே சென்றார்.

யாத்திரை செல்லும் வழி யில், யாத்திரை நிறைவுபெற மால் விடுமோ என வருந்திய போது, "மனமே கைலாயம்" என, முனிவரின் வாக்கை கேட்டு மனமகிழ்ந்து, மன்னரும் அவரது மனைவியும், சிவலிங்கத்தை கையில் ஏந்தியபடி வேம்பற்றூர் என்னும் ஊரை அடைந்தனர்.

அங்கு ஈசான மூலை வரும்போது நின்றுவிட்டனர். அதன் பின் அவர்களால் செல்ல முடியவில்லை.

"மனமே கைலாயம்" மீண்டும் முனிவரின் குரல் மன் னரின் காதில் விழுந்தது. அந்த இடத்திலேயே, மன்னரும் தேவியரும் கைலாய தரிசன பலனை பெற்று மகிழ்ச்சி அடைந்து, யாத்திரையை நிறைவு செய்தனர்.

புத்திர காமேஷ்டி யாகம் அங்கு நடத்தி அங்கே கோவிலை அமைத்து, கைலாச நாதர் சிவனுக்கும், ஆவு டைய நாயகி அம்பிகைக்கும் திருநாமம் சூட்டி கோவிலை கட்டி, கும்பாபிஷேகம் நடத்தி வழிபட்டனர்.

அதன் பலனாக ஆதிபராசக்தி அங்கையற் கன்னி யாக அன்னை மீனாட்சியே அவதரித்து பல்வேறு திருவிளை யாடல்களை நடத்தி மதுரையை அரசாட்சி செய்து மக்களை காத்து வருவது இன்று பக்தர்களால் நம்பபட்டு வருகிறது.

இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற இத்திருக் கோவில் சுமார் 88 ஆண்டுகளுக்கு பிறகு சிவனடியார்கள் வழங்கிய நன்கொடையால் திருப்பணிகள் செய்யப்பட்டு ஆவுடைய நாயகி சமேத கைலாசநாதர் திருக்கோவில் மகா கும்பாபி ஷேகம் கடந்த (6.3.2022) ஞாயிறு அன்று நடந்தது.

இங்கு சிறப்பு அம்சமாக பிரம்மனுக்கு தனி சன்னதியும் கல்வி ஞானம் தரும் நவகிரங்களின் புதன் பகவான் வேறு எங்கு இல்லாத வகையில், சிம்ம வாகனத்தில் காட்சி தருகிறார்.

வேம்பத்தூரில் ஆயிரக்கணக்கான தமிழ் புலவர் களும், வேத பண்டிதர்களும் கைலாசநாதரை வணங்கி ஞானம் பெற்று சிறந்து விளங்கியுள் ளனர்.

இதை அறிந்த கம்பர், ஒட்டக்கூத்தர்,







காள மேகர், கபிலர், பரணர், வேம்பத்தூரில் அவதரித்த கவிராஜபண்டிதர் போன்ற சங்ககால புலவர்கள் பெரும் பேர் பெற்று புகழ் அடைந்தனர்.

80 ஆண்டுகளுக்கு முன்பு, பிறகளூரை சேர்ந்த சின்ன கருப்பன் அம்பலம் தனக்கு ஆண் குழந்தை வேண்டி, அதன் பலனாக இக்கோவிலை சீரமைத்து பல சன்னதிகளை உருவாக்கினார்.

அதன்பின் தற்போது பெரு முயற்சியோடு சிவபக்தர் களால் கும்பாபிஷேகம் நிறைவு பெற்று, தற்போது தினமும் மண்டல பூஜைகள் நடை பெற்று வருகிறது.

அன்னை மீனாட்சி தேவியே இங்கு அவதரித்த தால், இங்கு வந்து தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு கைலா யம் சென்று வந்த பலனும், வெகு நாட்களாக குழந் தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தும் வரு கிறது.

பல கிராமங்களில் தற்போது கைலாசம், ஆவுடை யம்மாள் எனபெயர் உடைய வயதானவர்களை இங்கு காணலாம்.ஆவுடையநாயகி அம்பாள் சமேத கைலாசநாதர் திருக் கோவிலுக்கு மதுரை, சிவகங்கை ஆகிய ஊர்களில் இருந்து நேரடி பஸ் வசதி உள்ளது. மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாசேத்தி வழியாக எளிதாக வேம்பத்தூரை அடைய லாம். மேலும் இத்திருக் கோவில் பற்றி அறிய 9790325083 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.




# அற்புதமான, கலைநயமிக்க கருங்கல் கோவில்களை கட்டும்: ஸ்தபதி சண்முகம்







தமிழகத்தில் கலாச்சாரத்தில் கோவில்களுக்கு முக்கிய பங்குண்டு. சிற்பகலைகளை பறைசாற்றும்கோவில்கள் அனைத்தும்மன்னர்கள்கட்டியதாகத் தான் இருக்கும் அக்கோவில்கள் பெரும்பாலும் முழுமையாக கற்களினால் உருவாக்கப்பட்டதாகஇருக்கிறது. அத்தகைய கோவில் களில் சிற்பிகளால் தங்கள் முழு திறமையையும் காட்ட முடியும். ஆனால் இந்த காலத்தில் அப்படிபட்ட கோவில்கள் உருவாக்கப் படுவதில்லை. அந்த அளவுக்கு தற்காலத்தில் கலைஞர் களும் அதிகம் இல்லை. ஆனால் அந்த கற்கோவில் கலைஞர்கள் இன்னும் ஓரிருவர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சண்முகம் ஸ்தபதி. சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வசிக்கும் பரமக்குடி தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர்.

இவர் கல்லிலேயே கோவில் அமைப்பதில் பிரசித்தி பெற்றவர். இவர் சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியா குமாரி விவேகானந்தர் மண்டபம் செய்த ஸ்தபதிஎஸ்.கே. ஆச்சாரியாரிடம் 22 வருடம் உதவி சிற்பியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர கர்நாடக மாநிலத்தில் புகழ் பெற்ற பலகோவில் திருப்பணிவேலைகளில் பங்கு பெற்று, அழகிய கோவில்களை கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இவர் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கலை அம்சத்தோடு கோவில்களை கட்டி வருகிறார். குறிச்சி காசி விஸ்வநாதர் கோவில், வேலூர் அழகு நாச்சியம்மன் கோவில், இடைகாட்டூர் பாலமுருகன் கோவில் என இது வரை 500க்கும் மேற்பட்ட கோவில் பணிகளை முடித்துள்ளார். பத்துஆண்டுகளுக்கு முன்பு மானாமதுரை வேதியரேந்தல் விலக்கில் அமைந்துள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக பிரித்தியங்கிரா தேவி கோவில் முழுவதுமே கருங்கல்லாலே திருப்பணி வேலையை செய்து உள்ளார்.

இந்த கோவில் இவரது சிற்பகலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த கோவில் வளாகத்தில் கொடிமர கணபதி சொர்ணாஹா பைரவர், லட்சுமி கணபதி, பலிபீடம் போன்றவை முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர தற்போது சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் புதிய வடிவில் கோவில் அமைத்து வருகிறார். பல கிராமங்களில் நின்றுபோய் உள்ள கோவில் திருப்பணிகளை கண்டு அறிந்து சிற்பசாஸ்திர குறைபாடுகளை களைந்து திருப்பணிகளையும் செய்துள்ளார். ராஜகலைஞன் சிற்ப கலாரத்னா, மில்லியன் கோல்ட் கௌரவ டாக்டர் பட்டமும் பாராட்டு பெற்று உள்ளார்.

தெளிச்சாத்தநல்லூர் சண்முகம் ஸ்தபதி கூறும் போது "கோவில் கட்டி திருப்பணி செய்தால் கோடிபலன் கிடைக்கும். புல்லினால் கோவில் அமைத்தால் கோடி பலனும், புதுமண்ணால் அமைத்தால் 100 கோடி பலனும், துல்லிய தூய செங்கலினால் அமைத்தால் தூய 300 கோடி பலனும் கிடைக்கும். ஆனால் கருங்கல்லினால் அமைத்தால் கையில் வைகுண்டம் என்ற அளவுக்கு புண்ணியம் கிடைக்கும். அந்த அளவுக்கு கல்லில் அமைக்கப்படும் கோவிலுக்கு சிறப்பு உண்டு. என தெரிவித்தார்.

கலைநயத்தோடு கருங்கல் கோவில் திருபணிவேலைகளை செய்யும் ஸ்தபதி சண்முகத்தை தஞ்சை குருஜி கணபதி சுப்பரமன்யம் சாஸ்திரி, பஞ்ச முகப்ரத்தியங்கிராதேவிகோவில் சுவாமி ஜி,குன்றக்குடி மடாதிபதி பொன்னம்பலம் அடிகளார், பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் கோவில் ஸ்ரீ சிவபிச்சைகுருக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் டிரஸ்டி ஆன்மிக செம்மல் எஸ்பிதேவர் ஆகியோர் பாராட்டி வாழ்த்தி உள்ளார்கள்.



**பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்**



## மானாமதுரையில் ஹோட்டல்

# ஸ்ரீ பழனிஸ்

**சைவம்**







**அனைத்து சைவ உணவு வகைகளும் மற்றும் சைனீஸ், வடஇந்திய உணவு வகைகளும்**

**தங்களது இல்ல விழாக்களுக்கு ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்**



**மகிழ்ச்சியுடன் வாருங்கள் மனநிறைவோடு செல்லுங்கள்**

**அன்புடன் அழைக்கும்**

# ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்

**செல்: 8098097273 மெயின் ரோடு மானாமதுரை**

aanmeegamalar.com





# திருப்பம் தரும் திருகூடல்மலை





முருகனின் முதல்படை ஸ்தலம் திருப்பரங்குன்றம் அருகே உள்ளது புஜண்டர்மலை எனப்படும் திருகூடல்மலை உள்ளது.

இந்த மலையில் மானாமதுரை அருகே கட்டிகுளத்தில் அவதரித்த தவதிரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி பிரதிஷ்டை செய்து வழிபட்ட நவநீதபெருமாள், ஸ்ரீ பால தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்ளது.

தினமும் இங்கிருந்து ஸ்ரீசோமப்பா சுவாமி, ஸ்ரீ மாயாண்டி சுவாமி ஆகியோர் ஸ்ரீமீனாட்சிஅம்மன் யானைமலை யோக நரசிங்க பெருமாள் திருப்பரங்குன்றம் முருகனை தரிசித்து தங்களின் தவவலிமையால் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங்களைபுரிந்து உள்ளனர்.

இங்கு சித்தர்கள் தவபுரிந்த குகை மற்றும் சித்தர்கள் ஜீவசமாதி கோவில்கள் உள்ளது.

இவை அனைத்தும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி குருநாதர் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி நாமத்தில் ராமலிங்கம் விலாசம் என்ற பெயரில் திருகூடல்மலையில் கோவிலும் அடிவாரத்தில் சித்தர்கள் ஜீவ சமாதி கோவில் ஆஞ்சநேயர் பீடம், பசுமடம் உள்ளது.

மலையேறிசெல்ல படி, சாலை வசதி உள்ளது. தினமும் அன்னதானம் மற்றும் அமாவாசை பௌர்ணமி நாட்களில் சிறப்பு வழிபாடு பூஜை நடைபெறுகிறது.

திருகூடல்மலையில் சென்று சித்தர்கள் ஜீவசமாதி கோவிலில் வழிபாடு செய்து வரும் பக்தர்களுக்கு தங்களது வாழ்வில் திருப்பம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.





| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | [illegible] | 21 | 6 | 6 | 3, 30 | 4, 19 | 8 | 10 |
| 02 | [illegible] | 20 | 5 | 5 | 26 | 3, 18 | 4 | 9 |
| 03 | [illegible] | 21 | 7 | 6 | 26 | 4, 19 | 3,31 | 11 |
| 04 | [illegible] | 19 | 5 | 5 | 22 | 3, 17 | 27 | 9 |
| 05 | [illegible] | 19 | 5 | 5 | 19 | 3, 17 | 24 | 8 |
| 06 | [illegible] | 17 | 3 | 3 | 16 | 1, 15 | 21 | 7 |
| 07 | [illegible] | 17 | 3 | 2 | 13 | 1,15,30 | 18 | 6 |
| 08 | [illegible] | 16 | 1,30 | 1,30 | 9 | 13, 28 | 14 | 4 |
| 09 | [illegible] | 14 | 29 | 28 | 6 | 12, 27 | 11 | 3 |
| 10 | [illegible] | 14 | 28 | 28 | 3, 30 | 12, 28 | 8 | 2 |
| 11 | [illegible] | 13 | 27 | 26 | 26 | 10, 24 | 4 | 1, 30 |
| 12 | [illegible] | 12 | 26 | 26 | 24 | 10, 24 | 1,29 | 30 |





# மனகுறைகளை போக்கும் மடப்புரம் விலக்கு விசாலாட்சி விநாயகர்

விநாயக விரதங்களுள் சங்கரஹர சதுர்த்தி விரதம் தனி மகத்துவம் கொண்டது. ஒவ்வொரு மாதமும் பவுர்ணமியை அடுத்த நான்காம் நாள் தேய்பிறையில் வரும் சதுர்த்தி நாளை சங்கரஹர சதுர்த்தி திருநாள் என்பர். சங்கரஹர சதுர்த்தி விசேஷமாக அனுசரிக்கப்படும் பிள்ளையார் கோவில்களுக்கும் சென்று பிள்ளையாரை தரிசித்து நலம் பெறலாம். இப்படி சங்கரஹர சதுர்த்தி வழிபாடுகள் வெகு சிறப்பாக நடைபெறும் ஆலயங்களுள் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் விலக்கில் அருள்பாலிக்கும் திசை மாறிய விசாலாட்சி விநாயகர் ஆலயம் குறிப்பிடத்தக்கதாகும்.பொதுவாக திசை மாறிய தெய்வங்களுக்கு அருள் பாலிக்கும் திறன் அதிகம் என்பார்கள். கிழக்கு நோக்கியே எல்லா விநாயகர்களும் இருப்பார்கள். ஆனால் இத்தலத்தில் விநாயகர் திசை மாறி தெற்கு முகமாய் அருள் பாலித்து வருகிறார்.

விசலாட்சி விநாயகர் எனும் பெயரோடு திகழும் இந்த பிள்ளையார் பெருமான் திருக்கோவிலுக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்தும், மடப்புரம் காளியம்மன் கோவில் செல்லும் நகர பேருந்துகளில் சென்றால் மடப்புரம் விலக்கு தெற்குமுக விசாலாட்சி விநாயகர் கோவில் வாசலிலேயே இறங்கி கொள்ளலாம். இங்கு விசாலாட்சி ஜோதிட மந்திராலயமும் செயல்பட்டு வருகிறது. பார்க்க எளிமையாயினும் அருள் பொங்கும் அற்புத ஆலயமாக திகழ்கிறது. இந்த விசாலாட்சி விநாயகர் ஆலய கருவறையில் பாசம், அங்குசம், மோதகம், அபய முத்திரை தாங்கிய நான்கு திருக்கரங்களோடு




ON LINE
ஜோதிடம்



* பணம் தரும், கடன் தீர்க்கும் குபேர ஜாதகம் ரூ. 501
* வசிய மூலிகை ரூ. 501 * வசிய யந்திரம் ரூ. 1001
* தொழில் யந்திரம் ரூ. 1001 * ஏவல் யந்திரம் ரூ. 1001
* கல்வி யந்திரம் ரூ. 1001 * திருமண யந்திரம் ரூ. 1001
* நோய் தீர்க்கும் தன்வந்திரி யந்திரம் ரூ. 1001

உலகப்புகழ் "மாலைமுரசு" ஜோதிடர், பட்டிமன்ற நடுவர்

கரு.கருப்பையா

B.Sc., M.A., M.Phil., B.Ed., S.M.P.,

விசாலாட்சி ஜோதிட மந்திராலயம்
மடப்புரம் விலக்கு (ஆர்ச் எதிரில்)
விசாலாட்சி நகர்,
திருப்புவனம் - 630 611 (வழி) மதுரை

94431 65504, 95247 51504



Jothidar Karukaruppiah
Karu Karu Siddha
Karu Karu Vishal
herbal mix karukaruppiah

தங்க நிற குபேர வசிய டாலர் ரூ. 501





# மகாசிவராத்திரி நாளில் நடைபெறும் அன்னதான மங்கள சாய்பாபா கோவில் கும்பாபிஷேகம்

நெல்லை மாவட்டம் சேரன் மகாதேவி முக்கூடல் அருகே உள்ள ஒடைகரை துலக்கப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் அன்புமணி நாடார்

இவர் தற்போது மும்பையில் கார் ஓட்டுநர்ராக பணிபுரிந்து தீவிர சாய்பாபா பக்த்தராக இருந்து மாதம் ஒருமுறை சீரடிசென்று சாய் அப்பாவை தரிசித்து தற்போது சாய் கூட்டுபிராத்தனை குழு அமைத்து குழுவின் உள்ள சாய் பக்தர்களின் பிரார்த் தனைகளை சீரடி சாய்பாபாவிடம் வேண்டி அங்கேயே சாய் கூட்டுபிராத்தனை குழுசார்பில் வாழைஇலை அன்னதானம் செய்து வருகிறார்.

பலவருடமாக தன்கனவில் நினைத்தபடி சாய் அப்பாவிற்கு தன்சொந்த கிராமத்தில் கோவில் அமைக்க திருபணிசெய்து தற்போது ஒடைகரை துலக்கப்பட்டியில் வலம்புரி விநாயகர் ஸ்ரீ அன்னதான மங்களசாய்பாபா, ஸ்ரீ ஜோதிர்லிங்கம் பிரதிஷ்டை செய்துஉள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் தேதி சீரடியில் ஸ்ரீ அன்ன தான மங்கள சாய்பாபா விக்ரகம் பூஜை செய்து தனி கார் மூலம் ஒடைகரை துலக்கப்பட்டி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

வரும் மகாசிவராத்திரி பிப்ரவரி 18-ந்தேதி சனிக்கிழமை மகாகும்பாபிஷேகம் அன்னதானம் நடைபெறுகிறது. சாய்அப்பா கனவில் கூறியபடி நம்பிக்கை பொறுமையுடன் அன்னதானம் மங்கள சாய் பாபா கோவில் சாய்கூட்டுபிராத்தனை குழுவினர் முழு முயற்சியுடன் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.



பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்.


நம்பிக்கை பொறுமை
நல்லதே நடக்கும்
திருநெல்வேலி மாவட்டம்
ஓடைக்கரை துலுக்கப்பட்டி
ஸ்ரீ அன்னதான மங்கள சாய்பாபா திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா
நாள் 18.02.2023
சனிக்கிழமை காலை 7 மணி
மஹா அன்னதானம் காலை 9 மணி
திருப்பணி அன்னதானத்திற்கு உதவவும்
M.Anbumani Nadad, Tamilnadu Mercantile Bank,
Ac.No.:233100720600203
IFSC Code TMBL0000233 G-Pay: 9892676373
ஸ்ரீ அன்னதான மங்கள சாய்பாபா பக்தர்கள் குழு
தொடர்புக்கு: 9892676373 9152636666
ஸ்ரீ அன்னதான மங்கள சாய்பாப பக்தர்குழு
சாய் கூட்டு பிரார்த்தனை குழு
அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதையே அழைப்பிதழாக ஏற்று வரவும்

# பயம், நோய் போக்கும் சண்முக கவசம்

முருகப்பெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை என்ற கொள்கையோடு முருகன் மீது 6666 பாடல்கள் பாடியவர் பாம்பன் சுவாமிகள். இவர் இயற்றிய சண்முக கவசம் புகழ்பெற்ற நூலாகும். கந்த சஷ்டி கவசம் போல இது பயமும், நோயும் தீர்க்கும் மருந்து என்றால் மிகையில்லை.

பாம்பன் சுவாமிகள், சென்னை தம்புச்செட்டித் தெருவில் செல்லும்போது எதிர்பாராமல் குதிரைவண்டி மோதியதில் இடக்காலில் முறிவு ஏற்பட்டது. 73 வயதில் நேர்ந்த இந்த விபத்தால் இனி சுவாமிகளால் நடக்க முடியாது என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர்.

சுவாமிகள் மீது அன்பு கொண்ட சில பக்தர்கள், அவர் அருகே அமர்ந்து சண்முக கவசத்தை விடாமல் நம்பிக்கையோடு பாராயணம் செய்து வந்தனர். **“சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க”** என்னும் அடியைப் பாடியபோது சுவாமி களின் கால்கள் குணமானது.



அப்போது வானத்தில் இரு மயில்கள் தோகை விரித்து ஆடிய காட்சியை சுவாமிகள் கண்டார். தமிழிலுள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டையும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் முதலெழுத்தாகக் கொண்டு 30 பாடல்களுடன் பாடப்பட்டது சண்முக கவசம்.

தினமும் ஆறுமுறை சண்முக கவசத்தை பாடுபவர்கள் எத்தகைய நோயில் இருந்தும் விடுபடுவர் என்பது நம்பிக்கை. குறிப்பாக, முருகன் பிறந்த வைகாசி விசாகத் தன்று பாடினால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.


கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 165வது அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை வரவேற்கிறோம்

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அருணன் ஏஜன்ஸீஸ்
பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS
டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.
Emergency No : 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.
போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.

aanmeegamalar.com

# தமிழகத்தில் குழந்தைகள் கோவிலான ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி சமஸ்தான கோவில்





பராசக்தி குழந்தை பருவதிரு மேனியாக திகழும் வாலைஎனும் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி அன்னையே நவகோடி சித்தர்களின் தலைவி யாகவும், ஞானஸ்கந்தர் முருகன் கை வேறாக திகழ்வது ஸ்ரீவாலை பராசக்தியான ஸ்ரீபாலாம்பிகையே இவளுக்கு தமிழகத்திலேயே முதன்மை திருத்தலமாக திகழ்வது சென்னை, செங்கல்பட்டு அருகில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி சமஸ்தானமாகும்.

இங்கு ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி மூலவ உற்சவ திருமேனியாக, அரண்மனை அமைப்பில் ஆலய மும், அறிய கணபதி ரூபமாக ஸ்ரீஉச்சிஷ்ட கணபதி, கொடிமரம், ஸ்வர்ண விமானம், காமதேனு எதிர் இருக்க வீற்றிருக்கும் ஐம்பது ஆண்டு களுக்கு மேற்பட்ட ஸ்ரீபாலா ஆலயமாகும். இத்தலத்தில் அம்பாள் குழந்தையாக குமரி, தாயாக மூன்று திரிபுர சுந்தரி அம்பாளை தரிசிக்கலாம்.

பாலையின் மூல ரூபமான ஸ்ரீமத் லலிதா மகா திரிபுர சுந்தரி, 16 திதிகளை படியாக கொண்ட மாடி சந்நிதியில், 9அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் 69 வகைமூலிகை கள் கொண்டு முழுக்க முழுக்க மூலிகை இலை, பட்டை, வேர், சாறுகள், மரப்பிசின், பாலசிங்கம் சாளக்கிராமம் போன்ற அனைத்தும் இயற்கை பொருட்களை கொண்டு செய்யப்பட்ட ஔஷத லலிதாம்பிகையை கண்ணார தரி சிக்க சிறப்பு அவளது அருள் அழகை வார்த்தையால் விவ ரிக்க இயலாது.

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத ஸ்ரீமத் ஔஷத லலிதா திருமேனியை முருகனை ஆத்மார்த்த குருவாக கொண்ட ஸ்ரீவித்யா உபாசகர், சிற்ப ஆகம செம்மல், சிவஸ்ரீ இராஜசேகர இளம்பூரண சிவம் அவர்கள் இந்த மூலிகை அம்பாளை எட்டு ஆண்டுகளாக குருமண்டல யாகம் செய்து வளர்பிறை காலத்தில் தன் கடின உழைப்பால் உலகம் உய்ய இந்த மருந்து திருமேனி அம்பாளை செய்துள் உள்ளார்கள்.

இவளுக்கு அபிஷேகம் கிடையாது, பாத பூஜை மட்டுமே, ஸ்ரீசக்ர மகாராணி லலிதை இருபுறமும் ஸ்ரீமகா வாராகி, ஸ்ரீஇராஜ மாதங்கி அஷ்ட புஜங்களுடன் வீற்றிருக்கின்றனர், வேறு தலத்தில் இல்லாத சிறப்பாக இத்தலத்தில் வருடத்திற்கு நான்கு நவராத்திரி முறை நவராத்திரி நடைபெறுகிறது.

அதிலும் புரட்டாசி சாராதா நவராத்திரியில், குலசேகரன் பட்டினம் பிறகு செம்பை வாலை ஸ்ரீபாலாவிற்கு கொடியேறி பிரம்மோற்சவம் 15விழாவும், பங்குனி மாத அமாவாசை முதல் வசந்த கால லலிதா மகா நவராத்திரி கொடியேற்றம், ஸ்ரீகாமேஸ்வரர் லலிதா திருக்கல்யாணம், ஸ்ரீலலிதா பட்டாபிஷேகம், ஸ்ரீபாலா லாலி உற்சவம், ராம நவமி திதியில் பண்டாசூரசம்ஹாரநிகழ்ச்சி முருகன் செய்வது போல் ஸ்ரீபாலா, ஸ்ரீவாராகி, மாதங்கி, ஸ்ரீலலிதா எழுந்தருளி சம்ஹாரநிகழ்ச்சியும், சாந்தி அபிஷேகம், புஷ்பாஞ்சலி, தீர்த்தவாரி என பௌர்ணமி திதி வரை 15நாள் பெருவிழாவாக கொண்டாடப்படுகிற தமிழகத்தின் ஒரே தலமாகும்.

சிவன் நெற்றிக்கண்ணில் இருந்து எப்படி முருகன் தோன்றினாரோ அதுபோல் பார்வதியிலிருந்து தோன்றியவள் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி. லலிதையின் பிராண சக்தி, குட்டி லலிதா என செல்லமாக போற்றப்படுபவள், முருகனின் சஷ்டி கவத்தில் ஸ்ரீபாலாவின் மூலமந்திரமான ஐயும், கிலியும், அதனுடன் சௌவும் என்ற பாலா மூலமந்திரம் இடம்பெற்றுள்ளது.

சித்தர்களின் முதன்மை தெய்வமாக போற்றப்படுபவள் ஸ்ரீவாலை எனும் பாலாவும், முருகப் பெருமானும் ஆகும், இவ்விரு தெய்வங்களுக்கும் மாவிளக்கு தீபம் ஏற்றி வழிபடும் முறையும் ஆதி முதலே உள்ளது, முருகன் கவரவே ஸ்ரீபாலாசக்திதான். அகத்தியர், கொங்ணர், போகர், திருமூலர், கருவூரார் போன்ற சித்தர் யோகிகளுக்கு குண்டலினியை எழுப்பி நம்மை பரசிவமான சிவனிடம் சேர்ப்பவள், முருகனுக்கும், வாலைக்கும் அணு அளவும் பேதம் இல்லை.

நாவல் வனங்கள் சூழ்ந்த செம்பாக்கம் திருத்தலத்தில் ஸ்ரீபாலா, ஔஷத லலிதா ஆலயத்தில் பிரதி மாத பௌர்ணமி, நவாவரண பூஜை, ஊஞ்சல் உற்சவம் மற்றும் ஆடி, தை , புரட்டாசி, பங்குனி அமாவாசை முதல் நான்கு நவராத்திரிகளும், வாரநாட்களில் செவ்வாய், வெள்ளி, ஞா யிறுக்கிழமை, பூரம், மகம், பஞ்சமி, சதுர்த்தசி அமாவாசை வழிபாடு சிறப்பு.

இத்தலத்தில் மயிலை கற்பகாம்பாளிடம் பிரியமான ஆறுமுகம் என்ற அடியாரின் கனவில் அம்பாள் குழந்தையாக பல முறை காட்சியளித்தால் போரூர் விடோபா சுவாமிகள், காஞ்சி பெரியவர், சேஷாத்ரி சுவாமிகள், திருப்போரூர் சிதம்பரசுவாமிகள், கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அருளாசி அனுபவத்தால் 1979ல் உருவான ஸ்ரீபாலா பீடம் வீட்டு பூஜையறை வழிபாட்டிலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து இன்று ஸ்ரீபாலா சமஸ்தானம், ஔஷத லலிதா தர்பார் ஆலயமாக திகழ்கிறது. செங்கல்பட்டு திருப்போரூர் சாலை, (ஓ.எம்.ஆர்.அருகில்) செம்பாக்கம் கிராமத்தில் ஆலயம் உள்ளது. ஆலய தொடர்பு எண்: 97899 21151.

# மகிழ்ச்சியான வாழ்வை தரும் மாசான காளிஅம்மன்

## முருகனை வணங்கி அற்புதங்கள் பெற்ற சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ளது. கட்டிக்குளம் ஆன்மிக புராதனமான பகுதியாக உள்ள இங்கு எப்பகுதிக்கு சென்றாலும் திரும்பிய திசை எல்லாம் கோவில் களையும் நீர்நிரம்பிய குளங்கள் காணலாம். கட்டிகுளம்

எல்லையில் அமைந்துள்ளது. வணங்கு பவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வுதரும் ஸ்ரீமாசனகாளிஅம்மன் கோவில் உள்ளது.



அதை தொடர்ந்து அழகிய நாயகி அம்மன் கோவில் பழனி முருகனுக்கு தைபூசவிழா அங்கு உள்ள பெரிய நாயகி அம்மன் கோவிலில் கொடிஏற்றி திருவிழா தொடங்குவது போல் சூட்டுக்கோல் ராம லிங்கம் சுவாமி கோவிலில் பங்குனி உத்திரம் தேரோட்டம் விழா பத்துநாள் நடைபெறும்.

இங்கு பல ஆண்டுகளாக ஆறுகாலபூஜை மற்றும் ஆறு நைவேத்யங்கள் படைக்க பட்டு பக்தர்களுக்கு வழங்கபடுகிறது. இங்கு உள்ள கருப்பனேந்தல் மடத்தில் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி முதல் ஜீவ ஒடுக்கம் தவசாலை உள்ளது.

இங்கு தான் சீடர்க்கு தன் உள்ளங்கை யில் காசி ராமேஸ்வரம் சூட்டுக்கோல் மாயண்டி சுவாமி காண்பித்தார். இருவரும் தண்டபாணி சுவாமி பிரதிஷ்டை செய்து பல ஆன்மிகஅற்புதங்களை பெற்று உள்ளனர்.

முக்கிய நாட்களில் தண்டபாணி சுவாமி வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. தெய்வீக ஆற்றல் கிடைக்கும் இடமாக கட்டிக்குளம் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி கோவில் மற்றும் பட்டமான் இல்லம் கருப்பனேந்தல்மடம் உள்ளது. மதுரை ராமேஸ்வரம் சாலையில் முத்தனேந்தல் பஸ்நிறுத்தத்தில் இருந்து ஆட்டோவசதி உள்ளது.




பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்



ஸ்ரீ மாசான காளியம்மன் துணை, ஸ்ரீ ராமாயி துணை
ஸ்ரீ மாயாண்டி சுவாமி துணை

தங்கம் வைரம் நகை ஆபரண தயாரிப்பாளர்



செயின் வகைகள் பாம்பே டிசைன் கெட்டி வளையல்கள்
916 KDM நகைகள் ஆர்டரின் பேரில்
தரமான முறையில் செய்து தரப்படும்



P.குகன் செல்: 9865534470
10/3 பச்சையப்பன் காம்ப்ளக்ஸ்,
எழுத்தாணிக்கார தெரு சின்னக்கடை வீதி,
தெற்குவாசல், மதுரை-625 001

aanmeegamalar.com




150 க்கும் மேற்பட்ட இதழ்களையும்
மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"த்தையும்
aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

# பழனி பாதயாத்திரை உருவான வரலாறும் துவக்கப்பட்ட கோவிலும்



பழனி தைப்பூசம் உலக அளவில் பிரபலமான விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது, இந்த தைப்பூச தினத்தில் முருகனை சந்திக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பலநாட்களுக்கு முன்பிலிருந்தே பக்தர்கள் பாதயாத்தையாக பழனியை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்கள்.

இவ்வாறு நடந்து சென்றே முருகப்பெருமானை தரிசிக்கும் பழக்கம் ஆதி காலத்தில் இல்லாமல் இருந்தாலும், குறிப்பாக 500 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த நடைபயண தரிசனம் தோன்றியதாக கூறப்படுகிறது.

ஒவ்வொரு கால மாற்றத்தின் போதும், இந்து மதத்தில் புதிய புதிய பக்தி பழக்கங்கள் தோன்றும் என்பதற்கு இந்த பாதயாத்திரையை முன் உதாரண மாகும்.

சரி இந்த நடைபயணம் எவ்வாறு தோன்றியது, நடைபயணம் உருவான இடம் எது என்று விரிவாக பார்ப்போம்.

போக்குவரத்து வளர்ச்சியடையாத காலத்திலேயே, தொலைதூர வணிகங்களை தைரியமாகப் மேற்கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார் எனும் நகரத்தார் சமுகத்தினர்.

சுமார் 450 ஆண்டுகளுக்கு முன், இச்சமுதாயத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவர் உப்பு வியாபாரம் செய்து வந்தார். ஒரு கட்டத்தில் அவரது வாணிபம் நலிவடைந்தது. இதனால் பழனி முருகனிடம் தன் வாணிபம் பெருக செட்டியார் மனம் உருகி முறையிட்டார். வாணிபம் நல்லபடியாக நடக்கும் பட்சத்தில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை முருகனுக்கே அர்ப்பணிப்பதாக மனத்திலே பிரார்த்தனை செய்து கொண்டார்.

பழனி முருகன் அவருக்கு அருள் புரிந்தார். உப்பு வாணிபம் மேன்மேலும் வளரத் தொடங்கியது. செட்டியாரும் தான் வேண்டிக் கொண்டபடி முருகனுக்காக ஒதுக்கிய வருமானப் பங்கு பணத்தை ஆண்டு தோறும் தன் ஊரிலிருந்து பழனிக்குப் பாதயாத்திரையாகவே சென்று கொடுத்தார். முருகனின் கருணை வெள்ளத்தில் அழுந்திய அவர் அடுத்து வந்த ஆண்டுகளில் நோன்பிருந்து ஒரு குழுவாக நடைப்பயணம் வந்து ஆண்டு தோறும் வழிபாடு செய்யும் வழக்கத்தை மேற்கொண்டார்.

இதை அறிந்த மற்ற நகரத்தார்களும் ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் முருகனை தரிசிப்பதகாக பல குழுக்களாகப் பாதயாத்திரை மேற்கொண்டு

பழனி நோக்கி வந்தனர். இப்படித்தான் பழனி பாதயாத்திரை பிரபலமாகியது. ஒரு குழு பல குழுக்களாகி பல குழுக்கள் நூறாகி, நூறு ஆயிரங்களாகி இன்று லட்சக்கணக்கான மக்கள் தைப்பூசத் திருநாள் விழாவிற்கு செட்டிநாட்டுப் பகுதிகளிலிருந்து பழனி வருகின்றனர்.

இச்சமூகத்தினர் அனைவரும் தங்கள் ஊர்களிலிருந்து நடந்து குன்றக்குடி வந்தடைந்து அங்கு ஒன்று கூடி குன்றக்குடி முருகப்பெருமான் ரத்தினவேல் துணைக்கு வர காவடிகளுடன் தங்கள் குருவான சாமியாடிச் செட்டியாரின் தலைமையில் பாதயாத்திரை மேற்கொள்கின்றனர்.

இதைப்போன்றே மற்ற சமுகத்தைச் சேர்ந்த முருக பக்தர்களும் ஒன்று சேர்ந்து தைபூசத்தில் நடைபயணத்தை துவங்கினார்கள்.

நாளடைவில் பல்வேறு பிரிவினர்களும் காவடியெடுத்துப் பழனிக்கு நடந்து வருவர். வழியில் நாட்டார் காவடிகள் என்றும் நகரத்தார் காவடிகள் என்றும் நடைப்பயணத்தில் வரும் அனைத்துக் காவடிகளும் ஒன்று சேர்ந்து பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் செல்லும் காட்சிகள் மிகவும் அற்புதமானவை.

நாள் தோறும் அன்றாடப் பயண முடிவில் ஓரிடத்தில் ஒன்றாகக் காவடிகளை இறக்கி பூஜைகள் செய்து நடைபயணம் மேற்கொள்ளும் பக்தர்கள், பசி, தாகம் தீர்த்து வைத்து மறுபடியும் பயணம் மேற்கொள்வர். இவ்வாறு ஒரு வார காலம், பசி, தாகம், தூக்கம், உடல் வலி, கால்கள் வலி, ஊர், உறவு, வீடு, வாசல் எல்லாவற்றையும் மறந்து ஒரே சிந்தனையுடன் பழனி ஆண்டவனையே நெஞ்சில் வைத்து பாடியும் ஆடியும் நடந்து செல்வார்கள்.

பழனியை அடைந்ததும் காவடிகளையும் தங்கள் மனபாரங்களையும் ஒன்றாக முருகனிடம் இறக்கி வைத்துப் பூஜைகளும் நேர்த்திக் கடன்களும் செய்து முடிப்பார்கள். அங்கேயே ஓரிரு நாட்கள் தங்கி விரதமிருந்து இறைவனிடம் மனம் உருகி வேண்டுதல்கள் செய்து தைப்பூசத் தேரோட்டம் காண்பார்கள்.

இன்று உலகம் முழுவதிலும் இருந்து வரும் பாத யாத்திரையாளர்கள் பெருகிப் பெருகி ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் பழனியில் வந்து கூடும் பக்தர்கள் கூட்டம் அளவிட முடியாததாகி விட்டது.

தமிழகத்தின் பல பாகங்களில் இருந்தும் ஒரு மாதத்திற்கு முன்பே விரதமிருந்து பழனி நோக்கி பக்தர்கள் நடக்கத் தொடங்கி விடுவர். தமிழகத்தின் வேறு எந்த கோவிலிலும் பாதயாத்திரைப் பக்தர்கள் இந்த அளவுக்கு கூடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தைப்பூசத்திருவிழா உலக அளவில் மிகப் பிரபலமாவதுடன், உலகின் பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் தமிழகம் வந்து நடைபயணம் செய்யும் அளவிற்கு தைப்பூச நடைபயண பக்தி மிகப் பெரிய அபார வளர்ச்சி அடைந்துள்ளது.

பழனிக்குவரமுடியாத சூழ்நிலையில் உள்ள பல வெளிநாட்டினர், அவர்களது ஊரில் உள்ள முருகன் கோவில்களுக்கு நடைபயணம் மேற்கெண்டு, தைப்பூச தினத்தில் காவடியெடுத்து வழிபட்டுவருகின்றனர்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தைப்பூசத்தை அரசு விழாவாகவே கொண்டாடிவருகின்றனர்.

தீராத தொழில் நஷ்டம், திருமணம் கைகூடாதவர்கள், குழந்தைபாக்கியம் இல்லாதவர், தொடர் மன சஞ் சலத்தில் ஆட்படும் அனைவரும் தைப்பூசத்திற்கு விரதமிருந்து பழனிக்கு பாதயாத்திரை சென்றுவந்தால் பிரச்சனைகளிலிருந்து விடுபெறலாம்.



பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்

A.L.S.ராமையாநாடார் - சன்ஸ்
மரம், ஓடு, சிமிண்ட், உரம் வியாபாரம்
236, மெயின்ரோடு, மானாமதுரை

ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்
உயர்தர சேம்பர் செங்கல் தயாரிப்பாளர்கள்
செல்: 99946 75130, 94431 68202, 98424 68202, 04574269905

aanmeegamalar.com

# பஞ்சம் போக்கி மக்களின் இடர்தீர்த்த
# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32 அறப்பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதி யாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவ பக்தர் களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.



அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரண மாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ்சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்திதார். இந்தக் காலகதியை வெல்ல ஒரு வழியையும் கண்டறிந்து வைத்திருந்தார்.

தன் குடிசையைப் புதுப்பிக்கும் போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்துவிட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட்டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புறவில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச்சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரிசியாகக் கீழ் விழும்.

இடைக்காடர் போகியல்ல, யோகி. அவருக்கு ஒரு கைப்பிடி அரிசி ஒருநாளைக்குப் போதும். அதைக் கொண்டு கஞ் சிகாய்ச்சிக் குடித்தார். ஆடுகளும் அவரும் அந்த வறண்ட காலத்திலும் அழகாக தப்பிக் கொண்டே இருந்தனர்.

நவக்கிரகங்கள் கொடுத்த தாக்கத்தில் பூமியே திண்டாடும் போது, இடைக்காடாரும், அவரின் ஆடுகளும், எந்த பஞ்சமும் இன்றி வாழ்ந்ததை அறிந்த நவகிரகங்கள், இதற்கான காரணத்தை அறிய முற்பட்டது.

மாற்று உருவம் ஏற்படுத்தி நவக்கிரகங்கள் இடைக்காடா ரின் குடிசைக்குள் நுழைந் தனர். வந்திருப்பவை கோள்கள் தான் என்பதைத் தனது சித்தஞானத்தால் உணர்ந்து கொண்டார் இடைக்கடார்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற் கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறு வேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச் சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது.

உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஓரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

அவர்கள் கண்விழித்தபோது பெரிய அளவில் மழை பெய்து இடைக்காட்டூர் மலையாற்றில் வெள் ளம் புரண்டு கொண்டிருந்தது.

விழித்தெழுந்த கிரகங்கள், முன்பு அமர்ந்திருந்த நிலை யில் தங்களில் சிலர் இடம் மாறி புதிய திசை நோக்கி அமர்ந்திருப்பதைக் கண்டனர். அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் இடைக்காடரைப் பார்த்து நின்றனர்.

இடைக்காடர்சிரித்தார்.

"என்னை அறிய வந்தவர்கள் நீங்கள், நானோ, உங்களை முன்பே அறிந்தவன், எங்களை விடவா நீ பெரியவன் என்பது உங்கள் எண்ணம். என்னை விட எல்லாமே பெரி யது என்பதே என் எண்ணம். அதனாலேயே உலகம் உவந்து வாழ உங்களில் சிலரின்





நிலைப்பாட்டை அதாவது சஞ்சாரத்தை மாற்றியமைத்தேன்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட்களை மட்டுமல்ல, கோள் களையும் மாற்றும் வல்லமை அவர்களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்ட வர்களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத் திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குருபெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது.

பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடை பெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.

சிறிய கோவிலாக உள்ள இடைக்காடர் சித்தர் கோவிலை ராஜ கோபுரம், மகாமண்டபம், அன்னதான கூடம், தியான மண்டபம் மற்றும் தங்கும் வசதி சுகாதார வசதிகளை தமிழக இந்து சமய அறநிலைத்துறை செய்துதர வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலையில் மதுரையில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் கோவில் அமைந்துள்ளது. மதுரை மத்திய பேருந்து நிலையத்தில் இருந்தும், முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் இருந்தும் இடைக்காட்டுருக்கு அரசு பஸ் வசதி உள்ளது.


இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்



நவகிரகங்களைதிசை மாற்றி வைத்த நவகிரக நாயகன் மகான் இடை காடார் சித்தர் ஆலயத்தில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜை யும் அதனை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு நவகிரக தோசம் திரு மணதடை கல்வி குழந்தை யின்மை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க 97515559851 /9751936853

– இப்படிக்கு

இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்





பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்.

கோவில் சிற்பம், கருங்கல் வேலைகள், ராஜகோபுரப்பணி சிறப்பாக அமைத்துத்தரப்படும்



ஸ்தபதி V.பாண்டி

ராம்நகர், மானாமதுரை

தொடர்புக்கு: 9894784830

# வேண்டுதல் நிறைவேற அனுமனிடம் கடிதம் தரும் பக்தர்கள்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுந்தரபுரம் தெருவில் உள்ள சுந்தரவிநாயகர் கோவிலில் மூல நட்சத்திரத்தன்று அனுமன் உருவப்படம் வைக்கப்பட்டு வடைமாலை சாத்தப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

பூஜை தொடங்கும் நேரமான மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை மாணவ-மாணவிகள், ஆண், பெண், என ஏராளமான பக்தர்கள் கடிதம் எழுதிய கவர் தரு கின்றனர். அந்த கடிதங்களை அனுமன் உருவப்படத் திற்கு முன்பு வைத்து பூஜை செய்து அங்கே வைத்து விடுகின்றனர்.

கடிதம் கொடுத்த பக்தர்கள் அடுத்த முறை வந்து கடிதத்தில் எழுதிய கோரிக்கை நிறைவேறிவிட்டது என்று கூறி பூஜை செய்கின்றனர். கோரிக்கை நிறைவேறிய கடிதங்கள் உருவப்படத்தில் இருந்து எடுக்கப்பட்டு தனி பையில் சேகரிக்கப்பட்டு கோவிலில் வைக்கப் பட்டுள்ளது.

இந்த கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, பவுர்ணமி பூஜை மூல நட்சத்திரம் உள்ளிட்ட விஷேசங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மூல நட்சத்திரத்தன்று அனுமனிடம் கடிதம் கொடுக்க ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

இது பற்றி கோவிலை பராமரித்து வரும் முன்னாள் ராணுவ வீரர், பிரசாத், தமிழரசி தம்பதியினர் கூறும்போது,

மூலம் நட்சத்திரத்தன்று அனுமனுக்கு பலர் கடிதம் தருகின்றனர். சில நாட்களில் கோரிக்கை நிறைவேறி விட்டது என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். அனுமன் உருவப்படத்திற்கு முன்பு பூஜை செய்யப்படுகிறது.

கடிதங்கள் பிரிக்கப்படுவது கிடையாது. அனுப்புனர் கொடுக்கும் முகவரியும், பெறுநர் பகுதியில் வீர அனுமான், சுந்தரவிநாயகர் திருக்கோவில் சுந்தரபுரம் மானாமதுரை என்றுதான் கொடுப்பார்கள்.

அதில் நாங்கள் செந்தூரம் வைத்து அனுமன் உருவப் படத்திற்கு முன்வைத்து விடுவோம்.

இப்படி வேண்டுதல் மூலம் வெளிநாட்டில் வேலை வாய்ப்பு. திருமணம், நோய்குணமாகுதல் போன்ற பல கோரிக்கைகள் நிறைவேறியுள்ளன என கூறினர்.




# பெருமாளுக்கு உதவி செய்த மருமகன் யானை வாகனம் கொண்ட முருகன்



கயிலாய மலைக்கு ஈடாக கருதப்படும் மலை திருத்தணி மலை. என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி இருக்கிறார். முருகப்பெருமானுக்கு உரிய திருவுருவங்கள் 16. அதில் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத் தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடது கையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெரு மானுக் குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது.

லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வவளம் உண்டாகும் என்பது ஐதீகம். இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

இங்குள்ள இந்திரச்சுனை நீரால் முருகப்பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் பக்தர்கள் நீராட முடியாது. மார்கழி திருவாதிரை நாளில் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவது சிறப்பு.








aanmeegamalar.com

# மதுரையில் வானரவீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்



ராமாயணகாலத்தில் ராமபிரான் இலங்கை சென்றுபோரிட வானர படைகளை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பியபோது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கி இருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உப தேசம் செய்தார். ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலை வணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமையுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானாமதுரை வைகைஆற்றில்கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத்தார்.

வானர படைகள் இங்கு வீரம்பெற்றதால் வானர வீரமதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை எனஅழைக்க படுகிறது. ராமர், அனுமார் பாதம்பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானரபடைகள் பழங்கள் உண்டு மயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ்சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத்தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரை யில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசி அனுமராகவும் பக்தர்களால் வணங்கபட்டு வருகிறது.






மானாமதுரையில் மிக குறைந்த கட்டணத்தில்




aanmeegamalar.com

# இரண்டாவது நவபாஷான முருகன்




கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலை கள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,
2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேயே நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலை யை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம் வேண்டி சிவபூதங்களால் கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீன நாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணை கொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்தவும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக்கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற்றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கி விட்டார்.

அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்ட தாம். இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்ப ராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத் திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.





பழனி முருகன் கோவில்
கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச
விழாவிற்கு வருகை தரும்
பக்தர்களை வருக! வருக!
என வரவேற்கிறோம்



# ஸ்ரீ அழகர்மலையான்

## தங்கமாளிகை, பஸ் டிரான்ஸ்போர்ட்

**916 KDM தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் கிடைக்கும்**

**எங்களிடம் சுற்றுலா செல்ல A/C, AIR பஸ்கள் வாடகைக்கு கிடைக்கும்**








அன்புடன் அழைக்கும்

**T.தனசேகரன்** செல்: 9384290449 / 9443465663
ரவி ஹோட்டல் காம்ளக்ஸ் சிப்காட், சிவகங்கை ரோடு, மானாமதுரை

aanmeegamalar.com

# வடக்கு முகமாக அருள் பாலிக்கும் பிள்ளையார்பட்டி விநாயகர்



6 அடி உயர கம்பீரமாக அமர்ந்த கோலத்தின் மூர்த்திதான் – பிள்ளை யார்பட்டி விநாயகர்.

இது ஒரு குடவரைக்கோவில். வலம் புரிவிநாயகர் – சதுர்த்தி விரதம் மேற்கொண்டு நிறைவேற்றினால் நலம் பெறலாம்.

பிரதி ஜனவரி முதல் தேதி ஆயிரக் கணக்கான பக்தர்கள் விநாயகரை தரிசிப்பது வழக்கம். தமிழகத்திலேயே உண்டியல் இல் லாத கோயில் இதுதான். ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தி அன்று மஹா கொழுக்கட்டை செய்யப் படுகிறது.

பிள்ளையார்பட்டியின் பிரதானப் பெயர் மருதம்பூர். இங்கு மூலவராக கற்பக விநாயகர் அருள் தருகிறார்.

இக்கோவில் சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கபட்டு உள்ளது. குடைவரைக் கோவிலில் புகழ் பெற்ற பல்லவ மன்னர்களுக்கு முன்பே பாண்டியர்களால் அமைக்கபட்ட கோவில் கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் செட்டிநாட்டவர் வசமானது. இன்று வரை நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் மேற்பார்வையில் கோவில் வழிபாடு நடந்து வருகிறது.

கயமுகா சூரனை கொன்ற பிள்ளையார் தனது பழியை போக்கிக் கொள்ள சிவபெருமானை நோக்கி தவம் செய்த இடம் பிள்ளையார் பட்டியாகும். இங்கு சிவபெருமானை நோக்கி தவம் செய்த வண்ணம், வடக்கு முகமாகவே பக்தர்களுக்கு விநாயகர் அருள் பாலிக்கிறார்.

கற்பக விநாயகர் தனது வலது கையில் ஒரு சிவலிங்க சின்னமும், இடது கரத்தை தனது வயிற்றை சுற்றியுள்ள கச்சையின் மீதும் வைத்துக் கொண்டும் அமர்ந்து இருக்கிறார்.

இவரது தும்பிக்கை வழஞ்சுழியாக இருக்கிறது. மற் றொரு சிறப்பு அம்சம் இவருக்கு முப்பரிநூல் கிடையாது.

விநாயகர் சன்னதிக்கு எதிர்புறம் அமைந்துள்ள வடக்கு கோபுரவாசல் வழியாக சென்று வழிபட்ட பின்பு கிழக்கு கோபுரவாசல் வழியாக வரவேண்டும் என்பது மரபு.

விநாயகர் கோபுரத்துக்கு எதிர்புறத்தில் வெளிபிரகாரத்தின் வட திசையில் விசாலமான திருக்குளம் உள்ளது. ஒவ்வொரு சதுர்த்தியின் இரவு நேரத்தில் விநாயகர் மூசிக வாகனத்தில் எழுந்தருளி கோவில் உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. ஒன்ப தாம் நாள் தேர்திருவிழா புகழ் பெற்றது. இங்கு பிள்ளையாருக்கு தனியே தேர் உள்ளது. பிள்ளையார் தேரில் இரு வடங்களில் ஒன்றை ஆண்களும், மற்றொன்றை பெண்களும் இழுத்துச் செல்வார்கள்.

நடைதிறப்பு : காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை. தைபூச தினத்தில் மட்டும் காலை 6.00 மணிமுதல் பகல் 12.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை.



லெட்சுமி ஆட்டோ ஸ்பேர்ஸ்
96989 55068 /99521 24373
அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும்
உதிரி பாகங்கள்
குறைந்த விலையில் கிடைக்கும்
சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு
மானாமதுரை-630 666
புதிய கிளை: தாகியார்நகர், மானாமதுரை

P.சரவணன்
B.Sc.,DT.,Ed.,
LIC முகவர்
ஸ்ரீ பராசரர் ஜோதிட நிலையம்
சிவகங்கை ரோடு, மானாமதுரை.
செல்:97919 05666


D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606
செல்: 98424 09829

# உடல் வசீகரத்தை விரும்புபவர்களுக்கு உதவும் கந்த அலங்காரம்



இறைவனை நகை, அணிகலன்கள் போன்றவற்றை பயன்படுத்தி அலங்கரிப்பார்கள், இது கடவுள் மீது பக்தர்களுக்கு உள்ள அதீத பக்தியின் வெளிப்பாடாகும்.

இதிலும் குறிப்பாக முருகன், பெருமாள் போன்றவர்கள் அலங்காரப்பிரியர்கள், இவர்களைவித விதமாக பக்தர்கள் அலங்கரிப்பார்கள். இதைப்போன்றுவார்த்தையால் இறைவனை அலங்கரிக்கும் பாடல்களும் இந்துமதத்தில் அதிகம் உள்ளது. இதில் முருகனுக்கு பாடப்படும் "கந்த அலங்காரம்" மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அலங்காரத்தால் எப்படி இறைவனை வர்ணிப்போமோ, அதேபோல வார்த்தையால் வர்ணிப்பது மிகவும் சிறப்பு. இதன் உட்பொருள் மீண்டும் மெய்ஞானத்தைதான் குறிக்கிறது. இந்த கந்தன் அலங்காரத்தை, புற வாழ்க்கைக்கு பயன் படுத்தலாம். புற வாழ்க்கைக்கும், மேனி அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடியவர்கள் அது தொடர்பான துறையிலே இருப்பவர்கள் உடல் வசீகரமாக இருக்க நினைப்பவர்கள் அனைவரும் இந்த கந்த அலங்காரத்தை ஓதி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.






பழனி மலைக்கோவில் மகாகும்பாபிஷேக விழா மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தகோடி மக்களே

வருக! வருக!!

ஜோதிடர்

M.K.கதிரேசன்





செல்

9443105653

9487404922

ஜனனி மெடிக்கல்ஸ்,
66/1 தெற்குரதவீதி
மானாமதுரை







பழனி முருகன் கோவில் மஹா கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை

காட்டுஉடைகுளம்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் சார்பில் அழைக்கிறோம்

கோவில் டிரஸ்ட்டி

S.P.சுப்பிரமணியன்

S.P. நாகராஜன் S.P. முருகன்

தயாபுரம் பஸ்ஸ்டாப் மானாமதுரை





பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்.





சாந்தி முருகன் திருமண மஹால்

மானாமதுரை

மதுரை-ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் அனைத்து வசதிகளுடன் இயற்கை எழில்மிகு இடத்தில் நல்ல குடிநீர் வசதி, கார் பார்க்கிங் வசதியுடன் உள்ள மஹால்.

உரிமை: M.சாந்திமுருகன்

செல்: 99409 69649







# வரம் தரும் வைகைகரை அய்யனார் அற்புதங்கள் புரியும்

# அலங்காரகுளம் சோனையா கோவில்







சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர்பகுதியில் தாயமங்கலம் ரோடு அலங்காரகுளத்தில் அருள் பாலிக்கும் வணங்கும் பக்தர்களுக்கு வரம்தரும் வைகைகரை அய்யனார் நம்பியவர்களுக்கு பல அற்புதங்கள் புரியும் அலங்காரகுளம் சோனையா சுவாமி கோவில் உள்ளது.

இக்கோவில் தற்போது திருப்பணிகள் முடிந்து கலை நயமிக்க சிற்பகலை அம்சத்துடன் அமைக்கப்பட்டு இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகம் முடிந்து பலமாதங்கள் ஆகிவிட்டாலும் அழகுமிகு சர்வ அலங்காரத்துடன் அய்யனார் ஸ்வாமி எழில் மிகு சோனையா சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களை தரிசிக்க மானாமதுரை மற்றும் வெளியூர்களில் இருந்து வந்து வழிபட்டு செல்கின்றனர்.

இக்கோவிலில் தேவியருடன் அய்யனார், தனிசன்னதியில் பிரம்மாண்டமான சோனையா, சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர், ஸ்ரீ லாடசன்னாசி, மற்றும் காளிஅம்மன், ராக்கச்சிஅம்மன், இதுதவிர விநாயகர், முருகன், நவகிரகங்களுக்கும்தனி சன்னதியில் அருள் பாலித்து வருகின்றனர்.

அலங்காரகுளம் தீர்த்தம்அழகர் மலையில் உற்பத்தி ஆகும்நூபுர கங்கைதீர்த்தம் சமமாகும். அலங்காரகுளம் தீர்த்தகரையில் அய்யனார் அருள்பாலிப்பதால் பக்தர்கள்மனமுருகி வேண்டும் வரங்கள் நிறைவேறுவதாக பக்த்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தாயமங்கலம் முத்துமாரியம்மனை தரிசிக்க செல்லும் ஏராளமான பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தி விட்டு வைகைகரை அய்யனார் சுவாமியையும், அலங்காரகுளம் சோனையாசுவாமியையும் வணங்கி வழிபட்டு செல்கின்றனர்.

மானாமதுரை நகர்பகுதியில் உள்ள இக்கோவிலில் தனிசன்னதியில் கட்டிக்குளம் தவதிரு சூட்டுகோல் மாயாண்டி சுவாமி அருள் ஆசிவழங்கு கிறார்.








## பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்

### அருள்மிகு ஸ்ரீவைகை கரை அய்யனார், ஸ்ரீ சேனையா சுவாமி திருக்கோவிலில் ஸ்ரீ அய்யனார் குதிரை வாகன திருப்பணிக்கு

### நன்கொடை வழங்க அன்புடன் வேண்டுதல்



மானாமதுரை தாயமங்கலம் ரோடு அலங்கார் நகரில் அமைந்துள்ள மேற்படி திருக்கோவில் குதிரை வாகன திருப்பணி சிறப்பாக இறையருளுடன் நடைபெற்று வருவதால் உறவினர்கள், சமூகத்தார்கள் நண்பர்கள் மற்றும் பக்தகோடி பெருமக்கள் அனைவரும் தங்களால் முடிந்த **நன்கொடைகளை** வழங்கி இறைவன் அருள் பெற அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.







இறை பணியில்

ஸ்ரீ வைகைகரை அய்யனார் அலங்கார குளம் ஸ்ரீ சேனையா சுவாமி திருக்கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர்

**V.காளீஸ்வரன்** தலைவர்

சாலிய வாகனன் மக்கள் இயக்கம் மாநில அமைப்பு செயலாளர், சிவகங்கை மாவட்டம், ஒருங்கிணைந்த குலாலர் சமூக நலசங்கம், நிர்வாகிகள் மற்றும் சங்க உறுப்பினர்கள், மானாமதுரை.

**செல் 8110046517**



aanmeegamalar.com



பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்
காண வருகை தரும் பக்தகோடிகளை வரவேற்கிறோம்.
சீனியப்பா
டிம்பர் டிரேடிங்
மரம், ஓடு, கம்பி, சிமெண்ட், வியாபாரம்
வெளிநாட்டு மரம் இறக்குமதியாளர்கள்
சுதா ஏஜென்சிஸ்
S.நடராஜன்
SN.சுரேஷ்
சீனியப்பா தியேட்டர்
203, மெயின் ரோடு, மானாமதுரை.
Cell: 98424 68620




ஸ்ரீ வணங்காமுடி சேம்பர் பிரிக்ஸ்
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட எந்திரம் மூலம்
தயார் செய்யப்படும்
வயர்கட் செங்கல் உற்பத்தியாளர்கள்
மதுரை-ராமேஸ்வரம்,
பைபாஸ் ரோடு
மானாமதுரை
S.திவான்ராஜ்
D.வணங்காமுடி B.Arch
செல்: 98424 26626 / 98424 68628

# மனக்கஷ்டம், பணக்கஷ்டம் மட்டுமல்ல உலகமக்கள் படும் துன்பத்தையும் போக்கும்

# காகபுஜண்டர் அருளிய நற்பவி மந்திரம்

யுகங்கள் மறைந்தாலும், மகா பிரளயத்தினால் உலகமே அழிந்தாலும் தாம் மட்டும் என்றும் மறையாமல், அழியாமல் அனைத்தையும் சாட்சியாய் நோக்கிக் கொண்டிருக்கும் ஒரே மகரிஷி ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷி.

பல கல்ப கோடி பிரம்மாக்களையும், சிவனையும், விஷ்ணுவையும் பார்த்த பெருமைக்குரியவர். காகபுஜண்டர். இவரை நம்பிக்கையுடன் வணங் கினால் பாவங்கள் அனைத்தையும் போக்கும் வல்லமை பெற்ற மகரிஷி. இவர் உருவாக்கிய மூலமந்திரம் மிகவும் சக்திவாய்ந்ததாக இன்றும் பலர் பல சமயங்களில் பயன்படுத்துகின்றனர்.

"நற்பவி" இது மூல மந்திரம் மட்டுமல்ல, மகிரிஷி காக புஜண்டர் அவர்களால் கொடுக்கபட்ட மூல ஜபமந்திரம்.

நற் – நல்லது,
பவி – பவிக்கட்டும் / உண்டாகட்டும்

என்பதே இதன் பொருள் ஆகும். உலக மக்கள் யாவர்க்கும் நல்லது உண்டாகட்டும் என்ற கருத்தில் உண்டாக் கப்பட்டது.

இந்த மந்திரத்தை நேரம் கிடைக்கும்போதெல் லாம் உச்சரித்தால், சுலபமாக தீங்குகள் அழியும். இந்த மந்திரம் அஸ்திரமாக இருந்து ஜபிப்பவரை காக்கும்.

புருவ மத்திக்கும் மேலே உள்ள ஏழு திரை களை தாண்டி, பேரின்ப நிலையை அடைய "நற்பவி" மந்திரம் பேருதவியாக இருக்கும் என மகிரிஷி காக புஜண்டர் கூறியுள்ளார்.

நற்பவி ! நற்பவி !! நற்பவி !!!

என்று சொன்ன ஷணத்தில் இருந்து மகிரிஷி காக புஜண்டர் நம் குறைகளை போக்கி அருள்வார் என்பது அவர் வாக்காலயே அறியபடுகிறது.

நற்பவி என்று ஆழமாக மனதில் சொல்லிக் கொண்டே இருந்தால் போதும் வருங்காலத்தில் நடைபெறும் அனைத்து விஷயங்களும் நன்மை யாகவே முடியும்.

தீய விஷயங்கள் எப்படி சரி ஆகும் என்று ஆராய வேண் டியதில்லை, நமக்கு ஒரு சில வழிகள்தான் தெரியும், ஆனால் பிரபஞ்சத்திற்கு ஆயிரம் வழிகள் இருக்கும். அது எப்படியும் சரி செய்து விடும்.

நற்–நல்லது,
பவி– பவிக்கட்டும்

நமது இந்த வார்த்தைகள் மற்றும் எண்ணங்கள் பிரபஞ்சத்திற்கு கட்டளைகளாக அனுப்பப்பட்டு எல்லாவற் றையும் சரி செய்துவிடும்.

மனிதர்களின் ஆழ்மனதிற்கு உள்ள சக்தி அபரிமிதமானது, இந்த சக்தி பிரபஞ்சத்திற்கு நல்லதை நினைத்து கட்டளையிட்டால் பிரபஞ்ச சக்திகள் மனித ஆழ்மன சக்திக்கு கட்டுப்படும்.

இதைத்தான் காகபுஜண்டர் எளிமையான "நற்பவி" என்பதை மூல ஜப மந்திரமாக உபதேசித் துள்ளார்.

நமக்கு எதிராக எத்தனை பேர் செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றி பொருட்படுத்த வேண்டாம். பயம் மற்றும் குழப்பங்கள் வரும் போது பதட்டமில்லாமல் ஆழ்ந்த அமைதியாக இருக்க இந்த மந்திரத்தை பயன்படுத்தலாம்.

நான் மிகுந்த நம்பிக்கையாக இருக்கிறேன், விரைவில் அதிசயம் நடக்கும், ஏற்படப் போகும் எல்லா அதிசயங்களுக்கும் நன்றி, பிரபஞ்சத்திற்கும் நன்றி என்று மட்டும் ஆழமாக மனதில் சொல்லிக் கொண்டே இருங்கள். நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே இருங்கள்.

நமது வார்த்தைகள், சந்தோஷமான மற்றும் நம்பிக் கையான உணர்வுகள் மற்றும் எண்ணங்கள் போதும் எல்லா வற்றையும் சரி செய்துவிடும். நமது நேர்மறையான சக்தி இந்த பிரபஞ்சத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது என்பதை மட்டும் உணருங்கள்.

விதைத்தவன் தூங்கி விடுவான் விதை தூங்காது. எண்ணியவன் தூங்கினாலும் எண்ணம் தூங்காது. தனி மனிதருக்கு மட்டுமல்ல உலகிற்கே தீங்கு ஏற்படும் சமயங் களில் இந்த "நற்பவி" மந்திரத்தை ஒரு குடும்ப மாகவோ அல்லது குழு வாகவோ கூறிவந்தால் ஏற்படவிருக்கும் தீங்கு பஞ்சாக பறந்துவிடும்

காகபுஜண்டர் இந்த மந்திரத்தைப் பற்றி கூறும் போது....

"இது ஒரு மோகன மந்திரம் ஆகும் நற்பவி நற்பவி நற்பவி என்று சொல்லிக்கொண்டேஇருக்க தனிமனித கஷ்டங்கள், உலக மக்கள் கஷ்டங்கள் அனைத்தும்நீங்கும்" எனகுறிப்பிட்டுள்ளார்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம்இம் மந்திரத்தை சொன் னால் பலன் மிகுதியாக கிடைக்கும்.



# முருகனின் ஆறுபடைவீடு








முருகன் என்றாலே தமிழகத்தின் பிரதான தெய்வமாகவும், தமிழகத்தில் ஆறுபடை வீடு களைக் கொண்ட தெய்வமாக விளங்குகிறார். அந்தவகையில் தமிழகத்தில் கீழ்கண்ட ஆறு கோவில்களே ஆறுபடைவீடுகளாகும்.

## திருப்பரங்குன்றம்

அறுபடை வீடுகளில் முதலும் மூலாதாரமுமான திருத் தலம் இது. முருகப்பெருமான் சூரனை வதம் செய்தபின், இந்திரனின் மகள் தெய்வானையை கைப்பற்றிய சிறப்புமிகு தலம் திருப்பரங்குன்றம். அழகில் சிறந்த முருகன் தனது மனைவி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

## திருச்செந்தூர்

முருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில், இரண்டாவது தலம். கடற்கரையோரம் எழிலாக அமைந்திருக்கும் இந்த ஆலயம், சூரபதுமனை முருகப்பெருமான் அழித்த இடம். இங்கு ராஜ அலங்காரத்தில் சண்முகனாக, கைகளில்அன்னை தந்த வேல் தாங்கி வெற்றிவீரனாக அருள்கிறார் முருகப்பெருமான்.

## திருவாவினன்குடி (பழநி)

கந்தனின் அறுபடை வீடுகளில் மூன்றாவது தலம் இது. பழநி மலையடிவாரத்தில் சற்று மேல் புறத்தில் அமைந்துள்ளது திருவாவினன்குடி ஆலயம். திருமகளும், அலைமகளும், காமதேனு வும் பூஜித்த தலம். மலை உச்சியில் அமைந்துள்ள பாலதண்டாயுதபாணி சிலை நவபாஷாணத்தால் செய்யப்பட்டது. இதனைச் செய்தவர் சித்தர்களில் ஒருவரான போகர்.

## திருவேரகம் (சுவாமிமலை)

முருகப்பெருமான், தன் தந்தையானஈசனுக்கே உப தேசம் செய்த தலமான சுவாமிமலை. இது அறுபடை வீடுகளில் நான்காவதாக குறிப்பிடப் படுகிறது. சுவாமி என்பது இங்கு எல்லோருக்கும் பெரியவனாகிய சிவபெருமானையேக் குறிக்கிறது. இருப்பினும் மகனுக்கு சீடனாக இருந்து ஈஸ்வரன் உபதேசம் பெற்றதால், குருவாகிய முருகனுக்கு மேலே உயரத்தில் சன்னிதியும், கீழே சிவனுக்கு சன்னிதியும் அமைந்துள்ளது. இங்கு உள்ள 64 படிகளில் 60 படிகள் 60 ஆண்டுகளையும், 4 படிகள் 4 யுகங்களையும் குறிப்பதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

## பழமுதிர்சோலை (அழகர்மலை)

அறுபடைவீடுகளில் முருக பக்தர்களின் மனம்கவரும் வகையில் அமைந்த தலம் இது. பசுமையான சூழலில் மலை மீது அமைந்துள்ள இந்த ஆலயத்தில் வள்ளி தெய்வானையுடன் தம்பதி சமேதராக முருகப்பெருமான் அருள்புரிந்து வருகிறார். அழகர்கோவிலுக்கு மேலே சுமார் நான்கு கிலோமீட்டர் உயரத்தில் இக்கோவில் அமைந்துள்ளது.

## திருத்தணி

சூரபதுமனையும், அவனது சகோதரர்களான சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோரையும் முருகப்பெருமான் வதம் செய்தார். அவர்களின் அழிவு வழி போர்க் கோலத்துடன் ஆவேசமாக இருந்த முருகப்பெருமான், தன்னுடைய கோபம் தணிய வந்து அமர்ந்த தலம் திருத்தணி.'செரு' என்றால் கோபம், 'தணி' என்றால்'குறைதல்' என்றும் பொருள். முன்காலத்தில்'செருத்தணி' என்று அழைக்கப்பட்டு வந்த ஊரேதற்போது 'திருத்தணி' என்று வழங்கப்படுவதாககூறுகிறார்கள்.

மேற்கண்ட ஆறுபடைவீடுகளைப் போன்று தஞ்சாவூர் மாநகரிலும் முருகப்பெருமானுக்கு ஆறு படைவீடுகள் இருக்கிறது.

இந்த ஆறு கோவில்களும் தஞ்சாவூருக் குள்ளேயே அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் தஞ்சை பகுதியைச் சேர்ந்த பக்தர்கள், இந்த ஆறு படைவீடுகளுக்கும் பாத யாத்திரையாக சென்று வழிபடுவது வழக்கம்.



பழனி முருகன் கோவில்
கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச
விழாவிற்கு வருகை தரும்
பக்தர்களை... வருக! வருக!
என வரவேற்கிறோம்



# ஸ்ரீ அழகர்மலையான்

## தங்கமாளிகை, பஸ் டிரான்ஸ்போர்ட்

916 KDM தங்கம் மற்றும் வெள்ளி
நகைகள் கிடைக்கும்

எங்களிடம் சுற்றுலா செல்ல
A/C, AIR பஸ்கள் வாடகைக்கு கிடைக்கும்













அன்புடன் அழைக்கும்

**C.தெட்சணாமூர்த்தி** செல்: 9442041899 / 7373041899

மகர் நோன்பு பொட்டல் செல்லும் வழி, காரைக்குடி

aanmeegamalar.com

# நோய்களை குணமாக்கும் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக் கோயில் உள்ளது இக்கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்தவல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.

பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின்வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக்காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்புலிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது.மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம்மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெரூர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜுவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .

இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது. மானாமதுரையில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டும் செல்கின்றனர் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயனளிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.

மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வைகை கரையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.



பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம் மற்றும் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை... வருக! வருக! என வரவேற்கிறோம்

கோபால் இந்திரா திருமண மஹால்

தாயமங்களம் ரோடு, மானாமதுரை





P.கோபால்
மாவட்ட எம்.ஜி.ஆர்
மன்ற துணை செயலாளர்

இந்திரா
அதிமுக 9வது வார்டு
நகர்மன்ற உறுப்பினர்

செல்: 9629214801
G.தீனதயாளன்
7708141313

aanmeegamalar.com

# திருமண தோஷம், குழந்தை பேறு, கண் நோய் குறைதீர்க்கும்

# தாயமங்கலம் முத்துமாரி அம்மன்

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளையார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்து மாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப்பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உருவாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது. இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின்கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட் டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், ‘தாய்மங்கலம்’ என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக்கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.



இத்தலத்து வரலாற்றுப்படி,

பன்னெடுங்காலம் முன், ராமநாதபுரத்தைச் சேர்ந்த வணிகர்கள், தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய் வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். அவர்களில் ஒருவர், மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண் டவர். அவருக்கு நெடு நாட்களாக குழந்தை இல்லை. ஒவ்வொருமுறையும் மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும் அவ்வியாபாரி, தவறாமல் மீனாட்சியம்மையை யும், சொக்கநாதரையும் வழிபட்டு, தனது உள்ளக் குமுறலைக் கொட்டி தீர்த்துவிட்டு வரு வார்.

அப்படி ஒருநாள், மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார் வியாபாரி. வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்துவிட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரியவில்லை என்றும் கூறி தேம்பினாள். "கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திர மாகப் பார்த்துக்கொள்கின்றேன்" எனக்கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத்துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக் குழந்தையை தனக்குத் தந்த தாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அவர்கள் சென்ற வழியில் ஆறு ஒன்று குறுக்கிட்டது. பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் ரொம்பவே மனம் வெறுத்துப்போன அந்த வணிகர் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறி வருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப்போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான் உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்து எழுந்த வியாபாரி, தன் மனைவி யிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலையாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார்.

இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடைவில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வ மானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக்கப் பட்டவர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குண மாகும் என்பது இங்குள்ளமக் களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வரு வதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்துபவர்களையும் இங்கு காணலாம்.

## இலங்கையில் புத்தரிசி படையல், மலேசியாவில் 8மணி நேர பாதயாத்திரை

# உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் தைபூசம்



அசுரனை அழிக்க அன்னையிடம் வீரவேலை வாங்கி, கையில் ஏந்திய நாளே தைப்பூசம் ஆகும்.

முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத்திலே பூச நட்சத்திரம் வரும் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக உலக மெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தைப்பூசம் முருகப்பெரு மானுடைய விஷேசமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அன்றைய தினம் குழந்தைகளுக்கு காது குத்துதல், படிப்பைதொடங்குதல் போன்றவற்றை சிறப்பாக செய்வார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர் என உலகின் பல்வேறு நாடுகளில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

**ஏன் இத்தினம் சிறப்பு:** தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவ பெருமானிடம் வேண்டினர்.

தேவர்களின் நிலைகண்டு சிவபெருமான், அவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தன். அப்படி அவதரித்தவரே கந்தன் எனப் படும் முருகனாவார். சிவபெருமானின் தேவி யான அன்னனை பார்வதி தேவி யானவள் ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கு ஞானவேல் வழங் கியது தைப்பூச நாளில்தான்.

அதன்காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோவில்களைக் காட்டிலும் வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அப்படி அளிக்கப் பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப் பாற்றினான்.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயில் வதம் செய்து தேவர்கள் நிம்மதி அடையச் செய்தவர் முருக கடவுள். எனவே தான் அசுரர்களை வதம் செய்ய முருகப்பெருமான் பயன்படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடி பணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம்.

தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குகின்றனர். சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப் புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப் பார்கள்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்துவதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள் ளனர். இந்த தைபூசம் இந்தியா மட்டுமல்ல உலகெங்கும் பல நாடுகளில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. உலககெங்கும் தைபூசம் கொண்டாடினாலும் ஒருசில ஊர்களில் வித்தியாசமாகவும் தை பூசத்தை கொண்டாடுகின்றனர்.

**இலங்கையில் புத்தரிசி கொண்டாட்டம்:** தைப்பூசத்தில் தான் யாழ்ப்பாண மக்கள் புதிர் எடுப்பர். தைப்பூசம்முருகனுக்கு உரிய சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர்.

அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப் பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை

மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்

பீனாஸ் பத்திர எழுத்தகம்



பத்திர எழுத்தாளர்

Prop.N.P.வேல்முருகன் B.Com

State Document Writer

செல்: 98424 09829

95851 88741

உறங்காபுளி கருப்பண்ணசாமி துணை,

Ph:77085 95034

அம்மாவின் கை வண்ணத்தில்

குறள்

இட்லி தோசை மாவு

தங்கல் இல்ல சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் மாவு மொத்தமாகவும் சில்லரையாகவும் அரைத்துத் தரப்படும்

தயாபுரம் மானமதுரை அனைத்து கடைகளிலும் கிடைக்கும்

aanmeegamalar.com aanmeegamalar.com

சமைக்கப்படும்.

**மலேசியாவில்: 8 மணிநேர பாதயாத்திரை:** மலேசியாவில் முருகனுக்கு எட்டுமணி நேரத்திற்கு மேல் பாதயாத்திரையாக செல்வது வழக்கமாக கடைபிடிக்கின்றனர்.

சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து லட்சக்கணக் கான பக்தர்கள் மலேசியா பத்துமலையில் குவிகிறார்கள். தைப்பூச நன்னாளில் பக்தர்கள் கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிருந்து பத்து மலைக்கு அதிகாலையில் தொடங்கி ஊர்வலமாக நடந்து வருகிறார்கள். இதற்கு எட்டு மணி நேரமாகும். நேர்த்திக்கடன் செலுத்த சிலர் காவடி எடுத்து வருகிறார்கள். அலகு குத்தியும் இவ்வளவு தூரத்தை கடந்து நேர்த்திக்கடன் செலுத்துவோர் உண்டு.

**பினாங்கு 3 நாள் தைப்பூசம்**

மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் உள்ளதண்ணீர் மலை கோவிலில் பினாங்கு தைப்பூசம் மிக விமரிசை யாகக் கொண்டாடப்படுகிறது. தண்ணீர் மலை கோவில் இந்தியாவுக்கு வெளியே அமைந்துள்ள முருகன் ஆலயங் களில் மிகவும் பெரியதாகும். தமிழர்கள் மட்டுமின்றி சீனர்களும் தைப்பூசத்தை மிக விமரிசையாகக் கொண் டாடுகிறார்கள். இத்தைப்பூசத் திருநாள் மூன்றுநாள் நடை பெறும். தைப்பூசத் திருநாளை பினாங்கு மாநில அரசு பொது விடுமுறையாக அறிவித்துள்ளது.

**உலக அளவில் விடுமுறை:**

முருகனுக்கு உரிய தைப்பூசத்தன்று தமிழகம் மட்டுமின்றி, கேரளாவின் ஒருசில மாவட்டங்கள், புதுச்சேரி, மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு போன்ற வெளிநாடுகளில் விடுமுறை அளிக்கப்படுகிறது.

அதேப்போன்று மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, பிஜி ஆஸ்திரேலியாபோன்ற நாடுகளில் ஒருசில மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறைகொடுக்கப்படுகிறது.













# பக்தரின் கனவில் வந்த விக்ரகம்; சிற்பியை அடையாளம் காட்டிய சிறுவன்;

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ் சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.



அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரிவித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம் கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா.

காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ் சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

காஞ்சிப்பெரியவர் பயன்படுத்திய ஒரு ஜோடி பாதுகைகளும் இங்குள்ளன. காஞ்சி மடத்தில் இருந்து பெறப்பட்ட பாதுகைகள் இவை. அவரது திருவுருவச் சிலையின் முன்பாக வைக்கப்பட்டுள்ள இதற்கு, வெள்ளி கவசம் சார்த்தப்பட்டுள்ளது. மேலும் அவரது காணக்கிடைக்காத 40க்கும் மேற்பட்ட பெரிய புகைப்படங்கள் பிரேம் செய்யப்பட்டு மாட்டப் ப்பட்டுள்ளது. இங்கே வரக்கூடிய பக்தர்கள் காஞ்சி பெரியவரையும், அவரது பாதுகைகளையும் வணங்கி அவரது அருள்பெற்றுச் செல்கிறார்கள். ஒவ்வொரு அனுஷம் நட்சத்திர நாளன்றும், சிறப்பு அபிஷேகம், ஆராதனை பூஜை மற்றும் வழிபாடுகள் உண்டு. அப்போது சுவாமி சிலைக்கும், பாதுகைகளுக்கும் அபிஷேகம், பூஜைகள் நடக்கின்றன. தவிர, வியாழன்தோறும் குருவார பூஜையும் நடக்கிறது. அப்போது, 'காஞ்சி பெரியவர் அஷ்டோத்திரம்' சொல்லி, தீபாராதனையுடன் பூஜைகளும் சிறப்பாக நடக்கும். கடந்த 130 மாதங்களாக இந்த பூஜை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத் திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

# நீங்களும் உதவலாமே!

ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.40 வீதம்
300 பேருக்கு ரூ.12000 ஆகிறது

| | |
|---|---|
| 25 நபர்களுக்கு | - ரூ. 1,000 |
| 50 நபர்களுக்கு | - ரூ. 2,000 |
| 100 நபர்களுக்கு | - ரூ. 4,000 |
| 200 நபர்களுக்கு | - ரூ. 8,000 |
| 250 நபர்களுக்கு | - ரூ.10,000 |
| 300 நபர்களுக்கு | - ரூ.12,000 |

மதுரையின் அட்சயப்பாத்திரம் டிரஸ்ட்
இயன்றவரை உதவுவோம்...
இயலாதவர்களுக்கு
★ 94426 30815 ★

இந்த புனிதமான பணிக்கு உதவ
**Maduraiyin Atchaya Paathiram Trust**
என்ற பெயரில் அடியில் கண்ட முகவரிக்கு Cheque, M.O. (or) G-Pay மூலமும் அனுப்பலாம்.

**80-G வரிவிலக்கு உண்டு**

ரோட்டோரத்தில் உள்ள
வறியவர்கள் மற்றும் மனநலம்
பாதிக்கப்பட்டவர்களுக்கு
தினமும் உணவு வழங்கும்

# மதுரையின் அட்சயப் பாத்திரம்

இயலாதவர்களுக்கு உணவு வழங்குவது
மூதாதையர்களுக்கு திதி கொடுத்த
புண்ணியம் கிடைக்கும்.



வயிற்றுக்கு சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
- மகாகவி பாரதியார்

மதுரையில் ரோட்டோரத்தில், நகரின் மையப் பகுதிகளில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு உதவும் விதத்தில் "மதுரையின் அட்சயப் பாத்திரம்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த 598 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள், பிற நாட்களிலும் இந்த புனிதப் பணியில் தாங்களும் கரம் கோர்த்தால் இத்திட்டம் வெற்றியடையும்.

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை–16
**9442630815 (G-Pay)**

**Account Details:**
**MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST**
Canara Bank - Madurai West Avani Moola Street
**A/C No:11003139647 2**
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006

aanmeegamalar.com


விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை தாலுகா துலக்கன் குறிச்சியில்
எழுந்தருளி பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை தந்து அருள்பாலித்துவரும்
அருள்மிகு வாழைமர
பாலசுப்பிரமணிய சுவாமி
ஆலயத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்
உலக நன்மைக்காக தினந்தோறும் யாகம்,
திருமணம், குழந்தை வரம் வேண்டும்
பக்தர்கள் தங்கள் மனகுறை நீங்க
தங்கள் கைகளாலேயே
யாகம் செய்யலாம்
தைபூச திருவிழா
5.2.2023 ஞாயிறு
பக்தகோடி பெருமக்கள்
அனைவரும் வருகை தந்து
அருள்மிகு வாழைமர
பாலசுப்பிரமண்ய சுவாமியின்
அருள் பெற்று மகிழ்க
வேந்தர் டி.வி.யில் நம் வாழைமர
பாலசுப்பிரமண்ய சுவாமி திருக்கோயில்
முருகனின் தரிசனத்தைக் கண்டு மகிழுங்கள்
ஆலயத்தின் சிறப்பு விசேஷங்கள் அனைத்தும்
www.youtube.com/MATRIMONYTV மற்றும்
www.matrimonyty.com இணையதளத்தில்
நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
நிகழ்ச்சியை கண்டு முருகனருள் பெறுக
தொடர்புக்கு: விழாக் குழுவினர் 9840545860 / 91-8124245573